விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | கார்த்திகை 12 | சனிக்கிழமை | (27.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 344

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

* வங்கிக் கணக்கு அவசியமில்லை
* நீடிக்கப்பட்ட சேவை நேரம்
* 365 நாள் சேவை

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

# மாவீரர்தின நிகழ்வைக் குழப்பச் சதி

# ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டத்தால்

# திருமலையில் நேற்றுப் பதற்றம்!

## ஊரடங்கு உத்தரவு அமுல்; கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு

(திருகோணமலை)

**மாவீரர்தின நிகழ்வை குழப்பும் நோக்கில் திருகோணமலையில் நேற்று ஜே. வி. பியினர் மேற்கொண்ட திட்டமிட்ட ஆர்ப்பாட்டத்தினால், நகரில் பெரும் பதற்றநிலை உருவானது.**

**இதனையடுத்து பிற்பகல் உடடினயாக பொலிஸ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனினும் நேற்றிரவு அது நீக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.**

இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் மாவீரர் தின நிகழ்வுகளை நடாத்த அனுமதிக்கக் கூடாது என்றும் நிகழ்வில் ஏற்றப்பட்ட தமிழீழத் தேசியக் கொடியை அகற்றவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தவாறும், ஜே.வி.பியினர் நேற்று திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் செய்தனர்

இவ் ஆர்ப்பாட்டத்திற்கு ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த வீரசேகர தலைமை வகித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு எனக் குறிப்பிடப்பட்ட உருவப் பொம்மையையும், நோர்வே தேசியக் கொடியையும் தாங்கிச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள், திருமலை மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் இருந்து பேரணியாக புறப்பட்டு, விடுதலைப் புலிகளின் மாவீரர் நினைவாலயம் அமைந்துள்ள இந்து கலாசார மண்டப வீதி வழியாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசியத் தலைவரின் பிறந்த நாள் யாழில் சிறப்பாக கொண்டாடப்பட்டது



(திருநெல்வேலி)

தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்தநாளையொட்டி நேற்று யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் சமய, சமுக நிகழ்வுகள் மற்றும் கலை நிகழ்வுகள் எனப் பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இதற்கமைய வாழ்த்துச் செய்தியை எடுத்துச் செல்ல நேற்றுக் காலை நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமான மரதன் ஓட்டம் வல்வெட்டித்துறையிலுள்ள தேசியத் தலைவரின் வீட்டை நண்பகல் அளவில் சென்றடைந்தது.

மேற்படி மரதன் ஓட்ட வீரர்களுடன் வடமராட்சி கிழக்கில் உள்ள வீரர்களும் வடமராட்சியில் இருந்து இணைந்து தமது

(12 ஆம் பக்கம் பார்க்க)



மாவீரர்தின நிகழ்வால் எழுச்சி பெற்றிருக்கும் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம்.

முகமாலை - ஓமந்தை - உயிலங்குளம்

## சோதனை சாவடிகள் இன்று இரவு 11 மணிவரை திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு முகமாலை ஓமந்தை மற்றும் உயிலங்குளம் இராணுவ சோதனைச் சாவடிகள் இன்று இரவு 11 மணி வரை திறந்திருக்கும்.

மாவீரர் தின நிகழ்வுகள் நிறைவடைந்த பின்னர் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் அவர்களின் சொந்த இடங்களுக்கு மீளத் திரும்புவதற்கு வசதியாகவே இச் சோதனைச் சாவடிகள் திறக்கப்படவுள்ளன.

சோதனைச் சாவடிகளை இன்று இரவு 11 மணிவரை திறப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளால் இராணுவ தரப்பினரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ச-04)

## மட்டக்களப்பில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் நேற்று மாலை 6.30 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவ் இளைஞன் இராமநாதன் பரஞ்சோதி (வயது 25) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தனது வீட்டிற்கு முன்பாக நின்றுகொண்டிருந்தவேளை இவரின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துக்குள்ளான இவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ச)

## மல்வத்தபீடாதிபதியை நேற்று நோர்வே தூதுவர் சந்தித்தார்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் மல்வத்த பீடமகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையிலான சமாதான முயற்சிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பது குறித்தும் கடந்த சில நாட்களாக இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவும் தேரருடன் விரிவாக ஆலோசனை நடத்தியதாக நோர்வேத் தூதுவர் தெரிவித்தார்.

பிரச்சினைகளை ஏற்படுத்துபவர்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரு இராணுவத்தினருக்கு வெட்டு; நுணாவிலில் நேற்றிரவு பரபரப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் நேற்றிரவு இரண்டு இராணுவத்தினரை இனந்தெரியாதோர் வெட்டிக்காயப்படுத்தியுள்ளனர்.

சம்பவத்தில் ஒருவருக்கு வலது கை துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் மற்றையவருக்கு இடது கையிலும் தலையிலும் பலமான வெட்டுக்காயம் காணப்படுவதாகவும் தெரியவருகிறது.

இரவு 7.30 மணியளவில் கடமையை முடித்துக் கொண்டு நுணாவில் இராணுவ முகாமுக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த இருவரும் ஆபத்தான நிலையில் இருப்பதால் பலாலி இராணுவ வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த இருவரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவருகிறது.

இத்தாக்குதல் சம்பவத்தை யடுத்து நுணாவில் சாவகச்சேரி பகுதியில் ஏ-9 வீதியில் பயணம் செய்தோர் மீது படையினர் நேற்றிரவு தாக்குதல் நடத்தியதாகவும் இதனால் ஏ-9 வீதிப் போக்குவரத்து ஸ்தம்பித்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இத்தாக்குதல சம்பவம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# செய்தித்துளிகள்

## பெண்ணுக்குச் சிறை

(துன்னாலை)

அரச சாராயத்தை அனுமதி இன்றி விற்றவை தொடர்பான தொண்டமனாறு பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் இல்லாது விடின் 3 மாத சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் தீர்ப்பளித்தார். (ப-101)

## அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் மாவீரர் தின நிகழ்வு மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

சங்கத்தின் பொது முகாமையாளரும் பணிப்பாளர்களும் இணைந்து சங்கத்தின் கட்டடத்தில் சிவப்பு, மஞ்சள் கொடிகளை நாட்டி அலங்காரப் பந்தல் ஒன்றையும் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-130)

## போதைப் பொருளுடன் இரு பெண்கள் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக 90 கிலோ போதைப் பொருட்களைக் குவைத் நாட்டுக்கு எடுத்துச் செல்ல முயன்ற இரு பெண்களை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மதன மோதக லேகியம் எனப்படும் போதைப் பொருளை 5 பொதிகளில் அடைத்து எடுத்துச் சென்ற சமயமே நேற்றுக் காலை இவர்கள் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர் இவர்களுக்கு தலா 75 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு பின்னர், சுங்க அதிகாரிகளால் விடுதலை செய்யப்பட்டனர். (ற)

## சிரமதானம்

(கோண்டாவில்)

கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி, கோப்பாய்ப் பகுதி எங்கும் சிரமதானம் மூலம் வீடுகள், வீதிகள், ஒழுங்கைகள் அனைத்தும் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், மாவீரர் தினத்தை முன்னிட்டு இப் பகுதிகள் எங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் தெருவெங்கும் நாட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன. (ப-130)

## வீதி சேதம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் இருந்து யாழ் செல்லும் வீதிகளில் புத்தூர், சிறுப்பிட்டி போன்ற சில பகுதிகள் சேதமடைந்துள்ளன.

இதனால் போக்குவரத்துப் பயணிகள் பல இன்னல்களைச் சந்திக்கின்றனர். (ப-113)

## அனுமதி

(யாழ்ப்பாணம்)

துரித அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் நெடுங்குளத்தில் பொது மண்டபம் அமைத்தல், குருநகரில் கலாசார மண்டபம் அமைத்தல் போன்ற வேலைத் திட்டங்களை யாழ். பிரதேச செயலர் ஊடாக நடைமுறைப்படுத்துவதற்கு யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் அனுமதிவழங்கியுள்ளார். (ற-19)

## அப்துல் காதர் பிணையில் விடுதலை

(கொழும்பு)

சமுர்த்தி நிதியை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த 6 மாத காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சரும், ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினருமான அல்ஹாச் அப்துல் காதர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவரது பிணை மனுவை ஏற்றுக்கொண்ட 3 நீதியரசர்களைக் கொண்ட நீதிமன்றம் ரூபா 1 இலட்சம் ரொக்கமும் இரண்டு பேரின் ஆட்பிணையிலும் செல்ல கடந்த புதன்கிழமை அனுமதி வழங்கியது. (ற-4)

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

2004 ஆம் ஆண்டுக்கான பண்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வேலைத் திட்டங்களுக்காக யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களால் 23 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்கான வேலைத்திட்டங்கள் யாழ்.பிரதேச செயலகத்தினரால் இவ் வருடம் மார்கழி மாத இறுதிப் பகுதிக்குள் செய்து முடிக்கப்படவுள்ளது. (ப-19)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ற)

## இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கான இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கொன்று வரபிராந்திய ஸ்ரீசத்திய சாயி சேவா நிறுவன இளைஞர் பிரிவினால் நடாத்தப்படவுள்ளது.

இக் கருத்தரங்கானது நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 2 ஆம் திகதி வரை திருநெல்வேலி சத்தியசாயி நிலையத்தில் தினமும் காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை நடைபெறும்.

நாளை கணிதம், மறுநாள் தமிழ், 30 ஆம் திகதி விஞ்ஞானம், 1 ஆம் திகதி சமூகக்கல்வி, 2 ஆம் திகதி ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன. (ற)

## கொக்குவிலில் ஆடுகள் திருட்டு

(கோண்டாவில்)

கொக்குவில் பகுதியில் தினமும் ஆடுகள் களவாடப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

இவ்வாறு ஆடுகளைக் களவாடும் குழுவினர் அவற்றை வெட்டி விற்பனை செய்வதாகவும் தெரியவருகின்றது.

கடந்த சில வாரங்களாக இவ் ஆட்டுக் களவு தொடர்வது குறித்துக் கால்நடை வளர்ப்பவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இம் முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸாரும் தேடுதல் நடவடிக்கைகளிலும் விசாரணை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

இது பற்றிய தகவலையடுத்து கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருனகிரி ஸ்ரீ செல்வம் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளின் போது இரு ஆடுகளை உயிருடன் மீட்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ப-130)

# வடிசாராய வழக்குகளில் இருவருக்கு கடூழியச்சிறை

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக வடிசாராயம் வடித்தமை, சட்ட விரோதமாக 64 ட்ராம்ஸ் வடிசாராயத்தை உடமையில் வைத்திருந்தமை மற்றும் 300 டராம்ஸ் கோடா வைத்திருந்தமை போன்ற குற்றத்தின் பேரில் உரும்பிராய் நபர் ஒருவருக்கு மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜ இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனையும், 40 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

தண்டப்பணம் செலுத்தத் தவறின் மேலும் 8 மாதம் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உரும்பிராயைச் சேர்ந்த மற்றொருவர் சட்டவிரோதமாக 4 ரம்ஸ் வடிசாராயம் வைத்திருந்தமை, 1200 ரம்ஸ் கோடா உடமையில் வைத்திருந்தமை மற்றும் வடிசாராயம் வடிப்பதற்குரிய உபகரணங்கள் வைத்திருந்தமை போன்ற குற்றத்தின் பேரில் இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனையும், 40 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்தார்.

தண்டப்பணம் செலுத்தத் தவறின் 8 மாதம் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. (ப-5)

# இருபாதாள உலக கோஷ்டியினர் பொலிஸாரால் சுட்டுக்கொலை

(கொழும்பு)

இராஜகிரியவில் வைத்துப் பாதால உலகக் கோஷ்டியைச் சேர்ந்த இருவர் பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் வைத்திருந்த துப்பாக்கி ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகத்துக்கு இடமான நடமாட்டம் குறித்து மக்களால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து அவ்விடத்துக்குச் சென்ற பொலிஸார் அவர்கள் இருவரையும் கைது செய்ய முற்பட்டனர்.

அப்போது அவர்கள் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனையடுத்துப் பொலிஸார் திருப்பிச் சுட்டதில் இருவரும் ஸ்தலத்தில் பலியாகினர். (ச-4)

## மாவீரர் வாரம் நவ.21~27

### பாசத்துடிப்பு



தேசத்தின் விளக்குகளே
சுவாசம் நின்று போகிலும்
உங்கள் சுடர் வீச்சு
தொடர்கின்றது மண்ணில்யூ
விடியாத பொழுதுகளில்
முடி வெடுத்தீர்
தேசத்தில் வைத்த
பாசத் துடிப்புடனேயூ

இருளகற்றச் சங்கமமான
இதய தெய்வங்களே
உங்கள் பாதையிலே
புறப்பட்டு விட்டது தமிழினம்
புற நானூறு படைக்கயூ

கல்லறை மீதினில்
நாம் சிந்தும் கண்ணீர்
துளிகளே இதற்குச்சாட்சியூ
உம் வழியில் தொடரும்
எம் பயணம்யூ இது உறுதியூயூ

ஜோ. ஜெஸ்ரின்

### சுதந்திர சூரியன்களே

சோலைக்குள் துயில்கின்ற
சுதந்திர சூரியன்களே!
உங்கள் கல்லறைகளிலே
தமிழீழம் தெரிகின்றது!!

வாழ்வுக்குள் வாழ்வான
வைரக் கற்களே
உங்கள் தியாகத்தின் பயனாக
தமிழீழம் புலர்கின்றது!
மண்ணுக்கு வித்தான
மாவீரர்களே
உங்கள் - தியாகத்தில்
எழுகிறது தமிழீழம்! -தமிழீழ பாரதி-

### நீளநினைப்பதற்கு நிலையாக நின்றவர்கள்

தமிழீழத் தாயகத்தை எண்ணி எழுந்தவர்கள்
தாளா எழுச்சியுடன் தமிழ்மானம் காத்தவர்கள்
நீள நினைப்பதற்கு நிலையாக நின்றவர்கள்
நிரந்தர் விடிவுதர மண்ணுக்காய் உழைத்தவர்கள்
காலத்தால் அழியாத காவியமானவர்கள்
கரும்புலியாய் கடற்புலியாய் களமாடி எழுந்தவர்கள்
நாளை மலரும் தமிழ் ஈழத்தின் நாயகர்கள்
நாங்கள் தலை வணங்கும் தேசத்து மாவீரர்கள்!
-மதுரகவி, காரை. எம்.பி.அருளானந்தன்-

### நிச்சயம் விடியல் புலரும்

தினமும் பாடுவோம் அவர் வீரம் - நம்
கனவுக் இல்லை வெகு தூரம் - அவர்
சொல்லிய வார்த்தைகள் செவிகளில் ஏறும்
நிச்சயம் நாளை புலிக்கொடி பறக்கும்!

வல்லவரைப் போற்றும் மாவீரர் நாளில் -அவர்
கல்லறையைத் தேடி எம் கால்கள் நடக்கும்
கொல்லவரும் பகை ஒழிக்க தேகம் துடிக்கும்
மெல்லவரும் தலைவன் உரை; மேனி சிலிர்க்கும்!

கொட்டுகின்ற மழையினிலும் உங்கள் நினைவை
சுமந்த படி ஏற்றிவைக்கும் தீபம் சுடரில்
மெல்ல உங்கள் முகங்கள் அங்கே தெரியும்
மெல்ல மெல்ல நிச்சயம் விடியல் புலரும்!
வேல் நந்தன்

# சுவடுகளைப் பற்றுவோம்





" மாவீரர்களே! உங்கள் தியாக(த்)தால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகிறது உங்கள் நினைவுகளால் எங்கள் உறுதி வைரம் பெறுகிறது... எமது சுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தாலும் வியர்வையாலும் கண்ணீராலும் எழுதப்பட்டு இருக்கிறது."

தேசியத் தலைவர் பிரபாகரன் சிந்தனையில் இருந்து...

**க.பவன்**

இன்று மாவீரர் நாள். தமிழினத்தின் விடிவிற்காக தம் இந் உயிர்களை ஈகம் செய்த புனிதர்களை எம் இதயக் கோவில்களில் அமர்த்தி பூஜிக்கும் திரு நாள்.

மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள்; சுதந்திரத்தின் சிற்பிகள்; எமது மண்ணில் ஒரு மாபெரும் எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவார்கள்.

இவர்கள் மண்ணில் புதைக்கப்பட்டவர்கள் அல்ல, விதைக்கப்பட்டவர்கள் மீண்டும் துளிர் விடுவார்கள், வேரூன்றுவார்கள் விழுதெறிவார்கள் வளர்ந்து பெரியமரமாகி எம் தாயகத்தை தம்நிழலில் காப்பார்கள்.

இனவெறியர்களது ஆட்சியிலும் தமிழின துரோகிகளது சூழ்ச்சியாலும் தமிழினம் சிக்குண்டு சின்னாபின்னமாக்கப்பட்டபோது தமிழ் மக்களின் துயர்கண்டு பொறுக்க முடியாது சினம் கொண்டெழுந்து வேங்கைகளாகி எதிரியின் மீது பாய்ந்த இவர்கள் விடுதலை என்ற ஒரே இலட்சியத்துடன் இன்று கல்லறைகளில் துயிலுகின்றனர். தன்மானம், தனித்துவம், தனக்கென ஒரு தாயகம், தரணி போற்றும் வீரர் என்பன இருந்தும் ஓர் தலைமையில்லாத குறையால் ஏற்பட்ட கறைகளைப் போக்க எழுந்த தன் நிகரற்ற தலைவன் பிரபாகரனின் சேனையில் இணைந்து தாயகம் காணப்புறப்பட்டவர்கள்.

இவர்களில் முதன்மை பெறுபவர் லெப்ரினன் சங்கர். செ.சந்தியநாதன் என்ற இயற் பெயருடைய சங்கர்தான் தாயக விடிவிற்காகத் தன் 21 ஆவது வயதில் முதல் வித்தான மாவீரன்.



அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புத் தேச விடுதலையென்ற உயர்ந்த இலட்சியத்துக்காக துளிர் விட்டிருந்தகாலம்.

புலிகள் தலைமையில் தமிழினம் தலைநிமிர்ந்து விடக்கூடாது என்ற இனவெறி பிடித்த குள்ளநரி ஜே.ஆர். ஜெயவர்த்தனா. புலிகளை ஒழித்துக் கட்டுவதற்காக தமிழர் தாயகம் நோக்கி தன் கூலிப்படைகளை முடுக்கி விட்டிருந்தார்.





அப்பொழுது யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டேளபுலிகள் இயங்கி வந்தனர். இதனால் ஜெயவர்த்தனாவின் பரிவாரங்களும் யாழ்ப்பாணத்தைக் குறிவைத்து தமது புலிவேட்டை நடவடிக்கைகளை செயற்படுத்தத் தொடங்கின. இனவெறிப் பருந்துகளிடமிருந்து தமிழினக் குஞ்சுகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் தலைமறைவாகினர்.

என்றாலும் புலிகள் இயக்கம் தமிழ் இனத்திற்கு என ஒரு தாயகத்தை அமைக்கும் வரை ஓயாது செயற்படும் என்ற உண்மையைப் பேரினவாதிகளுக்கு உணர்த்தத் தவறவில்லை.

அவ்வவ்போது எதிரிகள் முன் மின்னலாய்த் தோன்றிப் பெரும் இடிகளைத் இறக்கினர். இத்தாக்குதல்களுக்கான குண்டுதயாரிப்புகள், வேவு நடவடிக்கைகள், போராளிகளுக்கான தாக்குதல் பயிற்சிகளை வழங்குதல், தாக்குதல் களங்களுக்கு போராளிகளை நகர்த்துதல், தாக்குதல் நடைபெற்ற இடத்தில் ஏற்படும் பதற்றம், பீதிகள், படைகளின் சுற்றி வளைப்புகள் எல்லாவற்றையும் மீறி எதிரிகளின் கண்களில் மண் தூவிவிட்டு தாக்குகளத்தை விட்டு புலிப் படை வீர்களை நகர்த்துதல் என்பவற்றில் லெப்ரினன் சங்கரது வேகமும், விவேகமும் மிகவும் துணையாக இருந்தது.

குறிப்பாக தமிழீழம் காணும் வரை தமிழர் போராட்டம் ஓயாது என்ற உண்மையை பேரினவாத அரச தலைமைக்கு உணர்த்திய நெல்லியடிப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினரது ஜீப்வண்டி மீதான தாக்குதல், பொன்னாலையில் ஸ்ரீலங்கா அதிரடிப் படையினர் மீதான குண்டுத்தாக்குதல் அன்று ஆட்சி அதிகாரத்தில் இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அடிவருடியாக விருந்த ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் தம்பாப்பிள்ளை மீதான தாக்குதல்,சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல் என்பவற்றின் வெற்றிக்குப் பின்னால் சங்கரது சாதனைகள் உள்ளன.

தான்மாண்டாலும் தன் எதிரியைக் கொன்றுவிட்டே மாளவேண்டும் என்ற உயர்ந்த இலட்சியம் உடைய சங்கர், சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலையடுத்து, இடம்பெற்ற சுற்றிவளைப்பின் பொது எதிரியின் குண்டடிபட்டு விழுப்புண்ணடைந்த நிலையில் 1982 ஆம் ஆண்டு கார்த்திகை 27 இல் தன் உயிரை மண்ணிற்காக ஈகம் செய்து முதல் வித்தாகினான்.

அன்று சங்கர் மூட்டிய விடுதலை வேள்விக்கு இன்று 17 ஆயிரத்த 780 மாவீரர்கள் தம் இந் உயிர்களை ஆகுதியாக்கி, விடுதலைத் தீயை கொளுந்து விட்டு எரியச் செய்துள்ளனர்.

இதில் 13 ஆயிரத்து 994 பேர் ஆண் மாவீரர்கள், 3ஆயிரத்து 788பேர் பெண் மாவீரர்கள், இவர்களில் கரும்புலிகள் 263 பேர், எல்லைப்படை வீரர்கள் 275 பேர் என உயிர்க் கொடைகள் இடம்பெற்றுள்ளன. எம் இன விடுதலைக்காக உயிர் துறந்த விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண நிகழ்வல்ல. அந்த சாவு சரித்திர நிகழ்வு. சாவின் முடிவில் ஓர் உண்ணத இலட்சியம்உயிர் பெறும் அற்புதமான நிகழ்வு.

உண்மையில் விடுதலை வீரர்கள் சாவதில்லை, அவர்களது உயிராக இயங்கி வந்த விடுதலைத் தீ என்றுமே அணைவதில்லை, மாறாக அது ஒரு வரலாற்று சக்தியாக எழுச்சி கொண்டு தேசியத்தின் ஆன்மாவைத் தட்டியெழுப்பும்.

ஒவ்வொரு மாவீரனதும் சாவும், எமது இனத்தின் இலட்சியத்தையே இயக்கும் உந்துசத்தியாக, இன விடுதலைப் போராட்டத்தின் உயிர் மூச்சாக, விடுதலைப் பயணத்திற்கு உத்வேகமளிக்கும் சக்தியாக உள்ளது.

தமிழீழத் தேசியத் தலைவன் வழிகாட்டலில் தமிழீழத் தாயகம் நோக்கிப் புறப்பட்ட மாவீரர்களது இலட்சியக் கனவுகளை மூச்சாகக் கொண்டு அவர்களின் சுவடுகளைப் பற்றி எம் பாதம் பதிப்போம். □

## சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை உடனடியாக அமைக்குமாறு கோரிக்கை

### பாராளுமன்றில் ஜயலத் பிரேரணை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு உடனடியாக அமைக்கப் பட்டவேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஏற்கனவே சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை அமைக்கும் வகையில், இதற்கான 4 உறுப்பினர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டு, அவை ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எனினும், ஜனாதிபதி இது குறித்து இதுவரை எதுவித பதிலும் வழங்காமையால் ஆணைக்குழுவை அமைக்க முடியாதிருக்கிறது.

இது அரசியல் அமைப்புக்குப் பாரிய நெருக்கடிகள் ஏற்பட வழிவகுக்கிறது.

எனவே, உடனடியாக இச்சபை அமைக்கப்பட்ட வேண்டும் அல்லது இது அமைக்கப் படாமைக்கான காரணம் குறித்து பிரதமர் விளக்கமளிக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார். (ந-4)

## தமிழ்க் குழு உறுப்பினர் ஒருவர் கொழும்பில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கொழும்பு தெமட்டக்கொடப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த ரங்கப்பா எனப்படும் சனிபேய் அலிக்கான் (வயது-45) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்புகையில் பின்தொடர்ந்து வந்த நால்வர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தலைமறைவாகியதாக தெமட்டக்கொடப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 20 வருடகாலமாக சென்னையில் தங்கியிருந்த இவர், கடந்த மூன்று மாதங் களுக்கு முன்னரே இலங்கை திரும்பியிருந்தார்.

இவர் ஈ.என்.டி.எல்.எப். அமைப்பின் ஆரம்பகால உறுப்பினர் என்றும் கருணாகுழுவுடன் செயற்பட்டவர் எனவும் தெரியவருகிறது. (ந-4)

## காவிய நாயகர்கள்

கடுங் குளிர் மழையைப் பாரார்
காடு மே டென்றுஞ் சோரார்
கொடும் படை முன்னே சென்று
நடுங்கிடப் போர் புரிந்தார்
நெடுங் கடல் மீதும் மாற்றான்
கலங் கிடும் வண்ணம் குண்டால்
நொருக்கிய வீரர்க் கோர் நாள்
நவம்பர் இருபத் தேழு அன்றோ!
அன்னை எம் தமிழ் மண் மீட்க
அடி பட்டு அமர ரானார்
மண் ணினை நேசித் ததால்
கண்ணெனும் உயிரை ஈய்ந்தார்
ஆயு தம் தாமே யாகி
அரண் பல தகர்த் தெறிந்து
பேசிட வைத்த வீர ரைப்
பூசிக்கும் நாளிதன்றோ

— கவிமணி அன்னைதாஸன் —

## இன்று ஒரு தகவல்

# தோலின் தன்மை

என்க்கு வேண்டப்பட்ட ஒருவன் என்னுடன் படித்துக் கொண்டிருந்தான். நாங்கள் இருவரும் விடுதியில் ஒரே அறையில் தங்கியிருந்தோம். தினமும் அவன் தான் காலையில் எழுந்திருப்பான். எழுந்தவுடன் என்னிடம் கூட ஒன்றும் பேசமாட்டான். மிகவும் தீவிரமாக யோசிக்க ஆரம்பிப்பான். "என்ன யோசிக்கிறாய்?" என்று நான் கேட்பேன். அவன் மிகவும் நிதானமாக பதில் சொல்வான். "இன்று குளிக்கலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்பான். இப்படி அவன் யோசித்த நாட்கள் தான் அதிகம். குளித்த நாள் குறைவு.

அவனுடன் ஒருமுறை குற்றாலத்திற்குப் போயிருந்தேன். அங்கேயும் இதேமாதிரித்தான் யோசிக்க ஆரம்பித்தான். அவனை மெதுவாகத் தள்ளிக் கொண்டுபோய் அருவியில் நிற் கவைப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. அப்போது எண்ணெய் தேய்த்துக் குளிக்க மாட்டான். சும்மா தான் குளிப்பான். குற்றாலத்தில் எண்ணெய் தேய்க்காமல் அருவியில் நிற்பது அபூர்வம்.

சிலர் சொல்வார்கள் எண்ணெய் தேய்த்துக் கொள்வதனால் ஒன்றும் பலனில்லை. நமது தோல் எண்ணெயை உறிஞுசுவதில்லை என்பார்கள். அது தவறு சமீப காலத்தில் சில ஆராய்ச்சிகளைச் செய்து பார்த்து விட்டு தோலுக்கு உறிஞ்சும் சக்தி உண்டு என்று சொல்லிவிட்டனர்.

தோலின் மூலமாக வைத்தியம் செய்து சில நோய்களைத் தீர்க்கலாம் என்று நமது முன்னோடிகள் முன்னரே அதைச் செய்துகொண்டு தான் இருந்தார்கள். வாதநோய்க்கு சிகிச்சை என்ன? சில தைலத்தை தயார் செய்து தோலில் சூடு பறக்கத் தேய்ப்பது. ஒத்தடம் கொடுப்பது. வேது பிடிப்பது போன்ற புறச் சிகிச்சைகள் ஏற்கனவே சித்த வைத்தியத்திலும் உண்டு. ஆனால்... இந்தக் காலத்துப் பாடப் புத்தகங்களில தோல் ஒரு நம்பகமான கவசம். அதனைத் தாண்டி எதுவும் உள்ளே போக முடியாது என்று தான் நாம் படித்தோம். இப்போது அந்த அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது.

பியாட்டர் ஸ்லைன் கோ என்று ரஷ்ய நிபுணர் ஒருவா இருந்தார். மனித உடலையும் மிருக உடலையும் மூடியுள்ள தோலை ஆராய்ந்தார். அவற்றின் உட்புகும் திறனை ஆராய்ந்து என்ன கண்டுபிடித்தார் தெரியுமா? குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் தோல் வழியாகப் பொருட்கள உள்ளே போக முடியுமாம். சில சந்தர்ப்பங்களில் தோல் அதை சுற்றியிருக்கும் காற்று அல்லது திரவங்களிலிருந்து சில கரைசல்களை விரும்பி உள்ளே உறிஞ்சிக் கொள்கிறதாம். உதாரணத்திற்கு அதிகாமாக வியர்க்கும் சந்தர்ப்பங்களில் தோலில் உள்ள துளைகள் பெரிதாகி விடும். வியர்ப்பது நின்றவுடன் அவை சுருங்கி பழைய நிலைக்கு வருவதற்கு கொஞ்ச நேரம் பிடிக்கும். அப்போது தோலின் மீது நுண்ணிய துகள், கரைசல் ஏதாவது இருந்தால் வியர்வை நாளங்கள் அவற்றைத் தீவிரமாக உறிஞ்சி உள்ளே இழுத்துக் கொள்ளுமாம். ஒருவர் வெயிலில் வெளியே போய் விட்டு ஈரத்துணியால் உடலைத் துடைக்கிறார். அப்போது என்ன ஆகும் தெரியுமா? துணியில் உள்ள ஈரத்துடன் அதில உள்ள அழுக்கு. கிருமி எல்லாம் சேர்ந்து உள்ளே போய் விடுமாம்.

நீராவிக் குளியல் செய்து விட்டு வரும் ஒருவரை ஒரு சிறிய அறைக்குள் உட்காரவைத்து அதற்கு மருந்து ஆவியைப் பரப்பினால் அது தோலுககுள் புகுந்து உடலிலும் பரவும். பால் சீரம் உடலுக்கு மிகவும் நல்லது. பாலில் இருந்து கொழுப்பு முழுவதையும் எடுத்து விட்டால் வே(**Whey**) என்ற திரவம் மிஞ்சும். அது தான் பால் சீரம். உடலை நன்கு வியர்க்க வைத்து அதன்பின் இந்தக் கரைசலை உடல் முழுதும் பூசினால் அதில் உள்ள சத்து முழுவதும் உள்ளே போய்விடும்.

மருத்துவப்பயனுள்ள களிமண்ணை உடலில் பூசுகின்ற ஒரு சிகிச்சைமுறை மேல் நாடுகளில் உண்டு இங்கேயும் இயற்கை வைத்தியத்தில் களிமண் குளியல் உண்டு. ஆனால் களிமண்ணால் மூடப்பட்ட தோல் வியர்த்தால் மண்ணில் உள்ள மருந்துச் சத்துகள் உடலுக்குள் பரவமுடியும். இதற்கு என்ன செய்யலாம என்றால் நோயாளியை நன்கு குளிப்பாட்டி விட்டு அதனபின் அவரை ஒரு சூடான அறையில் உட்கார வைத்து தாராளமாக வியர்க்கின்ற மாதிரிச் செய்து விடலாம். அதன்பின் உடலை நன்கு துடைதது விட்டு நீர்த்த களிமண் கரைசலை உடலில் பூசி விடலாம். இப்படிச் செய்தால் மண்ணில் உள்ள சத்து உடலிற்குள் செல்வது உறுதியாம்.

ஒரு வேடிக்கை பார்த்தீர்களா? மனிதன் தான் கடைசியில் மண்ணுக்குள் போகிறான் என்றால் அதற்கு முன்பாக மண்ணே மனிதனுக்குள போய்விடும் போலிருக்கிறது. எனக்குத் தெரிந்த ஒரு சிறிய ஆலோசனை. கோபப்படாமல் கேட்பது என்றால் சொல்கிறேன். இனி எங்கேயாவது எருமை மாடு சேற்றில் கிடந்தால் அதைப் பார்த்து விட்டு நீங்கள் ஒதுங்கிப் போகாதீர்கள். கிடுகிடுவென்று நீங்களும் அதில் இறங்கி குளிக்க ஆரம்பித்து விடுங்கள்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# மாவீரர் தினத்தைக் குழப்புவதற்கு மட்டு.நகரில் தீயசக்திகள் சதி

## மட்டு. அரசியல்துறைப் பொறுப்பாளர் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்புவதற்கும் இடைநிறுத்துவதற்கும் சில தீயசகதிகள சூழ்ச்சி செய்து வருவதாக விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அன்புமாறன் குற்றம்சாட்டியுள்ளார்.

கடந்த புதன்கிழமை மாலை மகாஜனா கல்லூரி மண்டபத்தில் புளியந்தீவு கோட்ட பிரதேச மாவீரர்களின் பெற்றோரைக் கெளரவிக்கும் நிகழ்வில் கலந்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது விடுதலைப் போராட்டத்தை நிராகரிக்கும் சக்திகளும், தமிழர்களுக்கு உரிமை கொடுக்கக் கூடாது என்பதில் விழிப்புடன் இருக்கும் சக்திகளும் மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்பத் திட்டமிடுகின்றன.

இராணுவக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பிரதேசத்தில் எமது போராளிகள் ஆயுத பலமோ, இராணுவ பலமோ இன்றி அரசியல் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பணியில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தில் சில போராளிகள் வீரச்சாவைத் தழுவியுள்ளனர். நாங்கள் எத்தகைய அச்சுறுத்தலை எதிர்நோக்கினாலும் மக்களின் பாதுகாப்புப் பலத்தைக் கொண்டுதான் அரசியல் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றோம்.

விடுதலைப் போராட்டத்தைச் சீர்குலைத்த சக்திகள் வெற்றி பெற்ற வரலாறு இல்லை. அச் சக்திகள் ஒருபோதும் வெற்றிபெறப் போவதுமில்லை எனத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி அங்கு உரையாற்றுகையில்,

தற்போதைய சமாதானத்திற்கான சூழ்நிலை, சமபலத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. போரியல் ரீதியாகப் பல வெற்றிகளைப் பெற்ற பின்பு தான் சமாதானத்திற்குரிய காலம் உருவாக்கப்பட்டது. சமாதான சூழல் உருவாக்கப்பட்டு இரண்டு வருடம் கடந்துவிட்டபோதிலும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

அரசு சமாதானச் சூழலைச் சாதகமாகப் பயன்படுத்தி உலக நாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களும், ஏனைய ஒப்பந்தங்களும் கைச்சாத்திடுவதன் மூலம் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

எங்களைப் பொறுத்தவரை யுத்த நிறுத்த உடன்படிக்கையை நாம் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடித்து வருகிறோம். அதனாலேயே சர்வதேசக கடற்பரப்பில் கூட எமது போராளிகளை அநாவசியமாக இழந்தோம்.

அச்சநதர்பபத்தில் நாங்கள் சமாதான நட வடிக்கைகளைக் குழப்பியிருக்க முடியும். ஆனால், நாங்கள் பொறுமையுடனும், உறுதியுடனும் சமாதானத்திற்கான அர்ப்பணிப்புடன் தொடர்ந்தும் செயறபடுகின்றோம் எனத் தெரிவித்தார். (ற-4)

# மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு அலுகோசிகள் மத்தியில் பாதுகாப்பு அச்சம்

(கொழும்பு)

இலங்கையில் மரணதண்டனையை அமுல்படுத்துவதற்குத் தயாராகி வரும் 'அலுகோசி' கள் தங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

கண்டி போகம்பரை சிறைச்சாலையிலும், வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் தலா 2 பேர் வீதம் 'அலுகோசி' கள் பணியாற்றி வருகின்றனர்.

கடந்த 20 வருடங்களாக மரண தண்டனை அமுல்படுத்துவது இடைநிறுத்தப்பட்டிருந்ததால் இவர்களுக்கு அங்கு எவ்வித வேலைகளும் இருக்கவில்லை.

சிறைச்சாலைத் திணைக்களத் தகவலின்படி மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள 203 குற்றக் கைதிகளில் 154 பேர் தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளனர்.

47 பெண்கள் உட்பட 49 பேர் மரணதண்டனைக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த மரணதண்டனையை நிறைவேற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலை அலுகோசியான சுரனிமல விஜயதுங்க இது குறித்துக் கருத்துக் கூறுகையில்,

செய்யும் தொழிலே தெய்வம் என்பதால் குற்றவாளியை தூக்கில் தொங்கவிடுவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

நீதிபதியொருவரைக் கொல்லுமளவிற்கு பாதாள உலக குழு நாட்டில் பெருமளவு இருப்பதால் எனது உயிருக்கும் ஆபத்து ஏற்படும் என்று அஞ்சுகின்றேன்.

இதனால் எனக்குப் பாதுகாப்புத் தேவை. சிறைச் சாலைக்கு அருகாமையில் குடியிருப்பு வசதிகள் வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் படலம் ஆரம்பமானவுடன் நாங்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை ஏற்படலாம்.

தண்டனையை நிறைவேற்றக் கூடாது என நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படலாம் என்று அச்சம் வெளியிட்டுள்ளார். (ற-4)

## இராசி பலன்

**27.11.2004**
**(கார்த்திகை 12 சனிக்கிழமை)**
**பிரதமை பின்னிரவு 3.11 மணிவரை**
**ரோகிணி பின்னிரவு 2.12 மணிவரை**
**இராகுகாலம் 9.13- 10.43 மணிவரை**
**சுபநேரம் 3.13- 4.43 மணிவரை**
**அமிர்த சித்தம், விஷ்ணுவாலய தீபம்**
**விநாயக விரதாரம்பம்**

**மேடம்** *காரியதாமதம், பிறர் உதவி, அதிக வார்த்தை, மாதர் நட்பு.*

**இடபம்** *போசனசுகம், தேகநலன், கற்பனை மிகுதி, காரியசித்தி.*

**மிதுனம்** *பிரயாண அலைச்சல், சுபசெலவு, சயனசுகக்குறைவு, ரோகநிலை.*

**கடகம்** *குடும்பநலம், நல்ல வருமானம், கீர்த்தி, இஷ்டசித்தி.*

**சிங்கம்** *நிலைமாற்றம், நல்ல செய்தி, தொழில் நன்மை, சகோதரர் உதவி.*

**கன்னி** *புதிய திட்டமிடல், பித்த ரோகம், எடுத்தகாரியம் தாமதமாகும், பிரயாணம்.*

**துலாம்** *போசன சுகம், வீண்மனஸ்தாபம் பிரயாணபயம், காரிய தடை.*

**விருச்சிகம்** *பிறர் உதவி, செளக்கிய விருத்தி, முயற்சி கைகூடும், நல்லவருமானம்.*

**தனுசு** *மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம், காரிய அனுகூலம், பிரயாணம்.*

**மகரம்** *கெளரவக்குறைவு, இடமாற்றம், முயற்சி தாமதம், வியாபார நன்மை.*

**கும்பம்** *புதிய விடயம், காரிய தாமதம், திடீர் நன்மை, உடல் நலக் குறைவு.*

**மீனம்** *விடா முயற்சி, தனவிரயம், குடும்ப சுகம், பிரயாண நன்மை.*

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**
**- வளவன்**

## சுங்க அதிகாரி கொலைச்சம்பவம்

# குற்றவாளிகளுக்கான மரண தண்டனை தீர்ப்பு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

சுங்க அதிகாரி சுஜித் பிரசன்ன இரண்டு வருடங்களுக்கு முன்னர் கொலை செய்யப்பட்ட வழக்கின் பிரதிவாதிகளுக்கான மரணதண்டனை கடந்த புதன்கிழமை உயர் நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கின் பிரதிவாதிகளான துணை சுங்க அதிகாரி அநுரவீரவன்ஸ உட்பட்ட மூவருக்கு ஏற்கனவே மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இத்தீர்ப்பினை அண்மையில் படுகொலை செய்யப்பட்டமேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய தலைமையிலான நீதிபதிகள் வழங்கியிருந்தனர். சரத் அம்பேபிட்டிய கொலை செய்யப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதியினால் அமுல் செய்யப்பட்ட மரணதண்டனை நிறைவேற்றத்தின பின்னர் மரணதண்டனை உறுதிப்படுத்தப்பட்ட முதல் வழக்கு இதுவாகும் என்பது குறிப்பிடத் தக்கது. (ற-4)

# சிறுவர் அரங்கம்

## இவை உங்களின் ஓவியங்கள்



ச. நிசாந்தன்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



செறினி
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை



தி. முரளி
கிளிநொச்சி.

## விடுகதைகள்

1. மழைக்குக் குடைபிடிக்கும் அரைச்சாண் குள்ளன் அது என்ன?

2. முயல் புகாத காடு அது என்ன?

3. முகத்தைக் காட்டுவான் முதுகைக் காட்டமாட்டான் அவன் யார்?

4. முத்துப் பல்லழகி முகம் காட்டி நிற்கிறாள். அவள் யார்?

5. முத்து முத்தாய் தோரணம் தரையில் விழுந்து ஓடுது அது என்ன?

6. மேலே பறப்பவனுக்கு கீழே கடிவாளம் அது என்ன?

7. யாரும் இறங்காத கிணற்றில் சின்னப் பையன் இறங்கினான் அவன் யார்?

சு. நிகேதினி,
கொக்குவில்.

உலகம் எவ்வளவு பெரியதோ, அவ்வளவு பெரிதாக உங்கள் இதயத்தை விரிவாக்குங்கள்.
-சுவாமி விவேகானந்தர்.

## செய்தி என்ன?



சேவல் கொக்கரக்கோ என்பர்
கூவிச் சேவல் ஏது சொல்வர்?
குயில்கள் கூகூகூ என்பர்
கூகூ என்றே ஏது சொல்வர்?
காக்கை காகா கா என்பர்
கரைந்து ஏது சொல்வர்?
கிளியார் கீகீகீ என்பர்
கீகீ என்றே ஏது சொல்வர்?
குருவி இனங்கள் அதிகாலை
கொஞ்சிச் சொல்லும் செய்தி ஏதோ?
பொழுது விடிந்தது என்பார்கள்
போதும் நித்திரை என்பார்கள்.

ஜோன்,
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை.

## பழைய பெயர் தெரியுமா?

| புதிய பெயர் | பழைய பெயர் |
|---|---|
| பீஜிங் | பீக்கிங் |
| சென்னை | மட்றாஸ் |
| ஹனோய் | கீச்சோ |
| ஹராரே | சலிஸ்பரி |
| ஈரான் | பேர்சியா |
| ஈராக் | மொஸப்படோமியா |
| ஜகார்த்தா | பாட்டாவியா |
| கொல்கத்தா | கல்கத்தா |
| லாஓஸ் | லென்சேங் |
| மும்பாய் | பம்பாய் |
| மியன்மார் | பர்மா |

## ஏழைக்கு உபதேசம்

பகவான் புத்தரிடம் தருமநந்தனர் என்றொரு சீடர் இருந்தார். அவர் புத்தருடன் பலகாலம் தங்கியிருந்து அவருடைய அறநெறிகளையும் தத்துவங்களையும் கற்றுக்கொண்டார். முடிவில் உலகம் முழுவதும் சுற்றிப் புத்த தருமத்தைப் பரப்பி வருவதாகவும், அதற்கு அனுமதி தருமாறும் புத்தர் பிரானிடம் கேட்டார் தருமநந்தனர்.

"தருமநந்தா, உலகம் முழுவதும் சுற்றுவது பிறகு இருக்கட்டும். முதலில் இந்த ஊரிலுள்ள மக்களிடம் நீ கற்ற உபதேசங்களைக் கூறிவா" என்றார் புத்தர் பிரான்.

தருமநந்தனரும் அங்கிருந்து கிளம்பிச் சென்றார். வீதி வழியாக அவர் வந்துகொண்டிருக்கும்போது பாதையோரத்தில் பிச்சைக்காரன் ஒருவன் அமர்ந்திருப்பதைக் கண்டார். அவன் முகம் பசியினால் வாட்டமடைந்திருந்தது.

தருமநந்தனர் தன் அருகே வந்ததும் அந்தப் பிச்சைக்காரன் அவரைப் பார்த்து "ஐயா, சாமி பசி எடுக்கிறது. சாப்பிட ஏதாவது கொடுங்கள்" என்றான்.

தருமநந்தனர் அவனைப் பார்த்து, "பசி என்பது பொய். நமக்குப் பசியெடுக்கிறது என்று நாம் நினைத்துக் கொள்வதாலேயே நமக்குப் பசி தோன்றுகிறது. இந்த உடல் என்றைக்காவது ஒருநாள் அழிந்துவிடக்கூடியது தான். நாம் பசி, தாகம் இவற்றைப் பொருட்படுத்தாமல் இறைவனையே நினைத்துக்கொண்டிருக்கவேண்டும். எல்லாம்வல்ல இறைவன் நமக்குச் சகல சௌபாக்கியங்களையும் அளிப்பார்" என்றார் தருமநந்தனர்.

தருமநந்தனரின் உபதேசம் எதுவும் பிச்சைக்காரன் காதில் விழவில்லை. தருமநந்தனர் நீண்ட நேரம் ஞானத்தைப் பற்றியும் முக்தி அடையும் வழியைப் பற்றியும் கூறலானார். பிச்சைக்காரனுக்கோ கோபம் கோபமாக வந்தது.

"உங்களால் ஏதாவது கொடுக்க முடியுமானால் கொடுங்கள். இல்லாவிட்டால் பேசாமல் போய்க் கொண்டிருங்கள். அனாவசியமான பேச்சு எதற்கு?" என்ற கோபத்துடன் தருமநந்தனரைப் பார்த்துக் கூறினான் பிச்சைக்காரன்.

"கோபம்தான் பாவங்களின் முதற் காரணம். கோபத்தை அடக்கினால் பக்தி பிறக்கும். பக்தி பிறந்தால் முக்தி கிடைக்கும்" என்றார் தருமநந்தனர்.

"எனக்குப் பக்தியும் வேண்டாம், முக்தியும் வேண்டாம் மரியாதையாக இங்கிருந்து போய் விடுங்கள்" என்று தருமநந்தனரைப் பார்த்துக் கூறினான் பிச்சைக்காரன்.

தருமநந்தனர் வருத்தத்துடன் திரும்பினார். புத்தர் பிரான் அவரைப் பார்த்து, "தருமநந்தா, ஏன் உன் முகம் வாட்டமடைந்திருக்கிறது?" என்று கேட்டார்.



"ஐயனே, வழியில் ஒரு பிச்சைக்காரனைச் சந்தித்தேன். அவனுக்கு ஞானமார்க்கத்தைப் பற்றியும் பக்திமார்க்கத்தைப் பற்றியும் நீண்டநேரம் உபதேசம் செய்தேன். ஆனால், அவன் நான் கூறியதில் ஒரு வார்த்தையைக்கூட எடுத்துக்கொள்ளவில்லை. மாறாக என் பேரில் கோபப்பட்டு என்னைத் துரத்திவிட்டான்.

அவனுடைய நன்மைக்காகவும் அவன் நலம் பெறவும் தானே நான் அவனுக்கு உபதேசங்கள் செய்தேன். இதை அந்த மூடன் உணரவில்லையே. இவ்வாறு இருந்தால் எப்படி அவன் வாழ்க்கையில் மேன்மையான நிலையை அடைவான்?" என்று வருத்தத்துடன் கூறினார் தருமநந்தனர்.

"அவனை இங்கு வரச் சொல். நான் அவனிடம் பேசுகிறேன்" என்று தருமநந்தனரிடம் கூறினார் புத்தர்பிரான்.

புத்தர் கூறியவாறே தருமநந்தனர் பிச்சைக்காரனிடம் வந்தார்.

"மகனே, புத்தபிரான் உன்னை அழைத்து வருமாறு கூறினார்" என்று பிச்சைக்காரனிடம் கூறினார் தருமநந்தனர்.

புத்தரைப் பற்றிப் பிச்சைக்காரன் நன்கு அறிவான். அவர் புகழைக்கேட்டு உலகெங்கிலுமிருந்து பலர் அவரை வந்து பார்ப்பது அவனுக்குத் தெரியும். அப்படிப்பட்ட மகான் மிகச் சாமானியனான தன்னை அழைத்து வருமாறு கூறியது அவனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியையளித்தது.

புத்தர்பிரான் தருமநந்தனருடன் வந்த பிச்சைக்காரனைப் பார்த்தார். அவனை அன்புடன் அழைத்துப் பக்கத்தில் அமருமாறு கூறினார். அவன் முகத்தைப் பார்த்ததுமே அவன் பசியோடிருக்கிறான் என்பதைப் புத்தர் பிரான் அறிந்து கொண்டார். உடனே பக்கத்திலிருந்த சீடர்களிடம் அவனுக்கு உணவு கொண்டு வந்து தருமாறு கூறினார்.

பிச்சைக்காரன் வயிறு நிரம்ப உண்டான். பின்னர் சிறிது நேரம் அவனை ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு கூறினார் புத்தர் பிரான்.

பிச்சைக்காரன் அவரை வாழ்த்திவிட்டு அருகேயிருந்த மரநிழலில் துண்டை உதறிப் போட்டுச் சற்றுநேரம் கண்ணயர்ந்தான்.

இதைப்பார்த்ததும் தருமநந்தனருக்கு வியப்பு ஏற்பட்டது. "ஐயனே, இவனுக்குத் தாங்கள் உபதேசங்கள் எதுவும் செய்யவில்லை. வயிறு நிறைய உணவு கொடுத்து அவனை ஓய்வெடுத்துக் கொள்ளச் சொன்னீர்கள்.

இவ்வாறு செய்தால் இவனிடம் உள்ள அஞ்ஞான இருள் எவ்விதம் அகலும்?" என்று புத்தரைப் பார்த்துக் கேட்டார் தருமநந்தனர்.

"தருமநந்தா, என்னுடை முதல் உபதேசம் இதுதான். இதை நீ நன்றாக நினைவில் வைத்துக்கொள். மனிதன் உயிரோடு இருந்தால் தான் தருமத்தின்படி அவன் நடக்கமுடியும். உயிரோடு இருப்பதற்கு முதலில் உணவு தேவைப்படுகிறது. பசியோடிருப்பவர்களுக்கு உணவு அளிக்கவேண்டியது தான் முதல் தர்மம். வயிறு நிரம்பியிருந்தால் தான் நாம் சொல்லும் உபதேசங்கள் அவன் மனத்தில் பதியும். எனவே தான் முதலில் அவன் வயிறு நிறைய உணவு தருமாறு கூறினேன். நாளைய தினம் அவனுக்கு உபதேசங்கள் செய்வேன்" என்றார் புத்தர்பிரான்.

இதைக்கேட்ட தருமநந்தன் இன்னும் நாம் கற்க வேண்டிய உபதேசங்கள் நிறைய உள்ளன என்று அறிந்துகொண்டவராய் அன்று முதல் மக்களுக்கு உபதேசங்கள் செய்யவேண்டும் என்ற எண்ணத்தை விட்டுவிட்டார்.

## ஒரு பொருள் பல சொற்கள்

| | | |
|---|---|---|
| அம்பு | ~ | கணை, வாளி, பாணம் |
| அழகு | ~ | வடிவு, வனப்பு, எழில் |
| ஆகாயம் | ~ | விண், விசும்பு, வானம் |
| ஈகை | ~ | கொடை, தானம், வண்மை |
| உடல் | ~ | உடம்பு, யாக்கை, மெய் |
| ஒலி | ~ | சத்தம், ஓசை, தொனி |
| கடல் | ~ | ஆழி, வேலை, சாகரம் |
| கல்வி | ~ | வித்தை, கலை, கேள்வி. |

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்

இந்த படத்தில் மறைந்திருப்பது என்ன என்பது தெரிய வேண்டுமா? கீழே கொடுக்கப்பட்டுள்ள இலக்கங்களுக்குத் தகுந்தபடி வர்ணம் தீட்டித் தெரிந்துகொள்ளுங்கள்.

1.மஞ்சள் 2.கபிலம் 3. நீலம் 4. பச்சை 5.சாம்பல்



## விடைகள்

1.காளான் 2.முக்காடு
3.கண்ணாடி 4.சோளக்கதிர்
5.மழை 6.பட்டம்
7.அகப்பை

# வெற்றிப் பயணம்

மாசி மாதத்தில் மூசிப்பெய்துகொண்டிருந்த பனியினையும் பொருட்படுத்தாது உடலைப் போர்த்தியிருந்த போர்வையை மெதுவாக விலக்கிக்கொண்டு உடலை அங்கும், இங்கும் நெழித்து அலுப்பு முறித்துக்கொண்டு மெதுவாகப் பாயை விட்டு எழுந்து கதவைத் திறந்தபோது காத்திருந்த கள்ளன் கத்தியால் குத்தியது போல பனிபடர்ந்த இளங் காலைத்தென்றல் சில்லென்று உடலை வருடிக்கொள்ள என்னையறியாமலேயே உரோமங்கள் சிலிர்த்து நிற்க, அறைச் சுவரிலிருந்த கடிகாரமும் மணி ஆறரை என்பதை அலாரம் எழுப்பித் தெரியப்படுத்திக் கொண்டிருந்தது.

வழமையிலே ஆறு மணிக்கெல்லாம் எழும்பி ஏழு மணிக்கு பஸ்ஸைப் பிடித்து எட்டு மணிக்கு வேலைக்குச் சென்று விடுவேன். ஏற்கனவே அரை மணிநேரத்தைத் தொலைத்துவிட்ட தத்தளிப்பில் படபட வென ஜன்னல் நிலையிலிருந்த பற்பொடியைக் கையில் கொட்டி வாயினுள் இட்டு விரலினால் குதப்பிக்கொண்டு துவாயினைத் தோளில் போட்டுக்கொண்டு கிடுகிடுவென எங்கள் பொதுக்கிணற்றடிக்கு ஓடினேன்.

எப்போதும் நெருக்கடியாய் இருக்கும் கிணற்றடியில் அப்போது யாரையும் காண முடியவில்லை. ஆனால் என்றைக்குமே நிசப்தமாய் இருக்கும் ஆனந்தர் வீட்டு ஒழுங்கையில் நாய்களின் குரைப்புச் சத்தமும் சனநடமாட்டமும் வழமைக்கு மாறாக அதிகமாய் இருந்தது.

என்ன நடந்ததென அறியும் ஆவலில் நானும் கையில் கிடைத்த சேட் ஒன்றை எடுத்து உடம்பில் மாட்டியபடி ஆனந்தர் வீட்டு ஒழுங்கையை நாடி வேகமாய் நடக்க ஆரம்பித்தபோது எனக்கு எதிரே வந்த பக்கத்து வீட்டு பரமு மாமாவின் படபடப்பு ஏதோ விபரீதம் நடந்துவிட்டது என்பதைத் தெளிவாகப் புலப்படுத்தியது. நிலமையைப் புரிந்த நானும் விடயம் அறியும் ஆவலில் பரமு மாமாவை அணுகி,

"மாமா, என்ன இவ்வளவு ரென்சனாய் இருக்கிறியள், ஒழுங்கைப் பக்கமும் ஒரே ஆக்களாய் இருக்கு என்னாச்சு" என வினாவ அவரும்,

"அதை என்னண்டெடா தம்பி சொல்லுறது... ஆண்டவன் இப்படி ஒருநாளும் ஒருத்தரையும் சோதிக்கக் கூடாது" என்றவாறு,

"ஆனந்தபுரம் ஆனந்தருக்கு திடீரென நெஞ்சு வலி வந்து மனிசன் மூச்செடுக்கக் கஸ்ரப்பட்டு துடியாய்த் துடிச்சுப் போச்சு. ஆளை இப்ப ஆட்டோ பிடிச்சு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகினம். எனி எல்லாம் கடவுள்சித்தம் ராசா" என்று ஆண்டவனை அலுத்துக் கொண்டவாறு பரமு மாமாவும் அப்பால் நடந்துசென்றார். ஆனால் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இரண்டு நாளிலேயே ஆனந்தர் குணமடைந்து ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டுக்கு வந்து விட்டார்.

நான் வேலையில் நிமித்தம் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவிற்கு வந்தபோது முதலில் சந்தித்தது ஆனந்தரைத்தான். யாருக்கும் கெடுதல் நினைக்காத அருமையான மனிதர். ஆனந்தரின் சொந்த இடம் திருகோணமலையிலுள்ள ஆனந்தபுரம் என்னும் சிறு கிராமம் தான். எனினும் நாட்டுப் பிரச்சினையால் ஏற்பட்ட இடப்பெயர்வினால் ஆனந்தரும் சில வருடங்களிற்கு முன்புதான் வவுனியாவிற்கு வந்து குடியேறியிருந்தார்.

கொள்ளிக்கு ஒரு பெடியனும் வம்சத்திற்கு ஒரு பெட்டையுமாய் வாழ்ந்து வந்த ஆனந்தர் குடும்பத்தில் ஆட்டவனின் சோதனைகள் அடுக்கடுக்காய் உருவெடுத்துக்கொள்ளத் தொடங்கியது.

ஷெல் அடிக்குப் பயந்து ஆனந்தபுரத்தைவிட்டு இடம் பெயர்ந்துகொண்டிருந்தபோது விமானக்குண்டுவீச்சுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த ஆனந்தரின் மனைவி மங்களம் மறுநாள் இறந்தசெய்தி ஆனந்தருக்கும் பிள்ளைகளுக்கும் தலைமேல் இடியாய் விழுந்தது.

தாயை இழந்த கவலையில் இருந்த பிள்ளைகளைத் தேற்ற வேண்டிய பெரும் பொறுப்பு ஆனந்தருக்கு ஏற்பட்டதால் பிள்ளைகளின் செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டியதாயிற்று.

இப்படியே சென்று கொண்டிருந்த அவர்களின் வாழ்க்கையில் மறுதுன்பமும் கார்முகில் கூட்டம்போல் சூழ்ந்துகொண்டது. சுற்றிவளைப்பு என கிராமத்தவர்களை அழைத்துக் கொண்டு அருகிலுள்ள கோயிலுக்குச் சென்ற இராணுவக் கும்பல் சில இளைஞர்களை வீடு திரும்ப விடவில்லை. அதிலே ஆனந்தரின் மகன் ருபனும் அகப்பட்டுக் கொண்டதால் ஆனந்தரின் மனம் ஆலையில் வீழுந்த கரும்புபோல் சுக்குச்சுக்காய் சுழன்றது கொண்டிருந்தது.

எவ்வளவோ தேடியும் முறைப்பாடுகள் செய்தும் மகனைப் பற்றி எந்தத் தகவலும் இல்லாததால் வெறுப்படைந்த ஆனந்தர் மகள் வானதியையும் இழந்துவிடக்கூடாது என்ற உத்வேகத்துடன் புறப்பட்டு வவுனியாவிற்கு வந்துவிட்டார். ஆனந்தரின் இந்த வாழ்க்கைச் சுவடுகள் எனக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியது. அதனால் அவர் மீது எனக்கு என்னை அறியாத ஓர் நெருக்கம் ஏற்பட்டது. இந்த நெருக்கம் எமக்குள் ஓர் வலுவான பிணைப்பினை உருவாக்கியது.

வழமை போல் அன்றும் சில நண்பர்களுடன் காலைப் பொழுதினில் முற்றத்து மாமரத்தடியில் கதைத்துக்கொண்டிருந்தபோது, திடீரென வீட்டடிக்கு வந்த இராணுவத்தினர்,

"ஐயே ஆமி ஐசி தியனுவாதா?" என சிங்களத்தில் கேட் டனர். அது அடிக்கடி கேட்டுப் புளித்துப்போன வார்த்தை ஆகையால் அர்த்தம் தெரிந்த நானும்,

"ஒவ் சேர்" என பதிலுக்குத் தலையாட்டினேன். அப்போது அருகில் நின்ற மற்ற சிப்பாய், அடையாள அட்டையைப் பார்த்துவிட்டு அனைவரையும் கோயிலுக்குச் செல்லுமாறு கொச்சைத் தமிழில் உச்சரித்துக் கொண்டிருக்க நாமும் கோயிலுக்குச் சென்றோம்.

கோயிலில் சொல்லமுடியாத சனக்கூட் டம். சனக்கூட்டத்தின் மத்தியில் இராணுவ கேணல் ஒருவர் ஏதோ சொல்லச் சொல்ல அப்பகுதி விதானையார் அதை தமிழில் சொல்லிக்கொண்டிருந்தார். கூட்டம் முடிந்ததும் எல்லோரையும் தலையாட்டி நிற்கும் பகுதிக்கு வரிசையாகச் செல்லும்படி ஒலிபெருக்கியில் அறிவிக்க, நானும் எனது சில நண்பர்களுடன் 'காக்க காக்க கனகவேல் காக்க.' என மனதுக்குள் துதித்தபடி ஊர்ந்துகொண்டிருந்த வரிசைக்குள் நுழைந்துகொண்டு திரும்பிப் பார்த்தபோது பக்கத்து வரிசையில் நின்ற ஆனந்தரும் வானதியும் என்னை காணத் தவறவில்லை.




வவுனியாவில் இது எனக்கு முதல் அனுபவம் ஆகையால் பதற்றத்துடன் நின்ற என்னைப் பார்த்து,

"தம்பி, மடியில கனமிருந்தால்தானே மனதில பயம் வரவேணும். நீ ஏன் பயப்படுறாய். பேசாமல் தைரியமாய் நடவப்பா" என்றார் ஆனந்தர்.

ஆனந்தரின் பதிலில் தைரியத்தை வரவழைத்துக்கொண்ட எனக்கு சுற்றிவளைப்பு முடிந்தபின்பு ஆனந்தருக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை.

'எனக்கு ஆறுதல் சொன்ன மனிசனுக்கு இப்படி ஆச்சே...' இவ்வாறாக என் மனம் புலம்பிக் கொண்டிருந்தது.

வானதி எதுகும் அறியாதவள் . சிறிவயதிலிருந்தே துன்பத்தில் வாழ்ந்தவள். ஆமி விசாரணைக்கு அழைத்துச் சென்றபோது அவள் மனம் என்ன பாடுபட்டிருக்கும் இதை விட ஆனந்தர் எப்படியிருந்திருக்கும். அந்தாளுக்கு ஏன் இப்படிச் சோதனைகள்.

சுற்றிவளைப்பு முடிந்து மூன்றாம்நாள் விசாரணை முடிந்து வானதியும் வீட்டுக்கு வந்துவிட்டாள். ஆனாலும் அவள் மனம் ஆறியபாடில்லை. இராணுவத்தினர் மீது அவளுக்கு ஆத்திரம்.

ஒரு வெள்ளிக்கிழமை வானதியைப் பெண்பார்க்க மாப்பிளை வீட்டார் வந்த பிறகுதான் தரகர் மாப்பிள்ளை தாரம் இழந்தவர் என்ற செய்தியை ஆனந்தருக்கு வெளிப்படுத்தினார். விடயமறிந்து அவர் கோபப்பட்ட போது அக்கூட்டத்திலிருந்த ஒருவர்,

"பெட்டை மட்டும் பத்தினியோ? ஆமிபிடிச்சு விட்டு வந்தவள்தானே" என்றதும் வானதி வெட்கம் தாங்க முடியாது அழுதபடி வீட்டுக்குள் ஓடிவிட்டாள்.

பெண் பார்ப்பில் ஏற்பட்ட மனக்கசப்பால் மனமுடைந்த ஆனந்தருக்கு மூன்றாம் முறையும் மாரடைப்பு ஏற்பட்டதால் வானதி தனிமரமாய் நின்று தந்தையின் இறுதிக்கடமைகளை செய்ய வேண்டியதாயிற்று.

தந்தையின் ஓர் ஆண்டு திதி வரைக்குமாய் தன் மானத்துடன் காத்திருந்த வானதி தனக்கு A-9 பாதையில் பிரயாணம் செய்து பழக்கமில்லாததால் நான் யாழ்ப்பாணம் செல்லும்போது தானும் கிளிநொச்சி வரைக்கும் வருவதற்கு உதவி கோரி வந்தாள். நானும் சம்மதம் தெரிவித்துக்கொண்டேன்.

குறித்த நாளில் பயணம் தொடங்கியது. வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரை கூடவந்த வானதி கிளிநொச்சியில் பஸ்ஸிருந்து இறங்கிக் கையசைத்துவிட்டுச் சென்றபோது அவளது மனதிலும் எண்ணத்திலும் இருந்த உறுதியினைக் 'கண்டு என்மனம் என்னையறியாமலே வெட்கிக்கொண்டது.

அவளது பயணம் நமது மண்ணின் வெற்றிப் பயணம் என்பதை பஸ்ஸில் வந்த ஏனையோர் அறிந்திருக்க வாய்ப்பே இல்லை.

(யாவும் கற்பனை)

சுப. கஜேந்திரன்
அச்சுவேலி.

## சரத் அம்பேபிட்டியவை கொலைசெய்த குற்றவாளிகள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

மேன்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவை கொலைசெய்த குற்றவாளிகள் பொலிஸ் உளவுத்துறையின் விசேட பிரிவினரால் நேற்று முன்தினம் ஆதாரங்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் பாதாள உலகக் கோஷ்டியின் திட்டப்படி குறிப்பிட்ட தொகைப் பணத்திற்காக, கடற்படையிலிருந்து தப்பியோடிய குறிப்பிட்ட நபர் இன்னும் சிலரையும் சேர்த்துக் கொண்டு இந்தத் திட்டமிட்ட கொலையைப் புரிந்தமை தெரியவந்துள்ளது.

கொழும்பு புறநகர்ப் பகுதியான ஹல்ஸ்டோப்பில் அமைந்துள்ள மறைவிடத்தில் வைத்து இந்த முன்னாள் கடற்படைச் சிப்பாய் கைது செய்யப்பட்டதாகவும் ஏனையவர்கள் கடுவல, கௌனிய போன்ற பகுதிகளில் வைத்துக் கைதானதாகவும் தெரியவருகிறது.

பாதாள கும்பலைச் சேர்ந்தவர்களின் ஒப்பந்தப்படி, நீதிபதியைக் குறிப்பிட்ட வழக்கின் தீர்வு வெளியாகும் முன்னரே படுகொலை செய்ய வேண்டுமென்று கோரப்பட்டிருந்ததாகவும், சம்பவதினம் தனது சக பாடிகளுடன் ஸ்தலத்திற்குத் துப்பாக்கியுடன் விரைந்த முன்னாள் கடற்படைச் சிப்பாய், இக்கொலையைப் புரிந்ததாகவும் பொலிஸார் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன (ற)

## மாவீரர்கள் நினைவாக பழமரக் கன்றுகள் வழங்கல்

(புலோலி)

புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்பட்ட மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் சங்க உறுப்பினர்களின் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பின் போது ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாவீரர் நினைவாக குத்துவிளக்கு, பயன்தரும் மரக் கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன. சங்க மண்டபத்தில் புலோலி பலநோக்குக் கூட்டுறவு சங்க உப தலைவர் பெ.ஆறுமுகநாதன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் அரசறிவியலாளர் கல்லூரி அதிபர் சு.அரசண்ணா "தாய்மை எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற் றினார்.

இதில் சங்க நெறியாளர்கள், கிளைக் குழுத்தலைவர், செயலாளர்கள், பணியாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ப-101)

## நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

வடகிழக்கு மாகாணத்தில் சேவையாற்றவென க.பொ.த.உயர்தரத்தில் சித்தி பெற்ற ஆயிரம் பேரை ஆசிரியர்களாக நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 30ஆம் திகதி முதல் டிசம்பர் 16ஆம் திகதி வரை திருகோணமலை மாகாண கல்வி அமைச்சு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் தினமும் 120பேர் என்ற அடிப்படையில் மொத்தம் ஆயிரத்து 500பேர் இந் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். (க-9)

## போராட்டத்தின் நியாயத்தன்மையை சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளது

### குயிலின்பன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

சர்வதேச சமூகம் எமது விடுதலைப் போராட்டத்தை இன்று நியாய பூர்வமானது என்று உணரத்தொடங்கியிருக்கின்றது.

இதற்கு மாவீரர்களின் தியாகமும், அவர்களால் விதைக்கப்பட்ட உரமுமே காரணமாகுமென விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயின்பன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை அம்பாறையில் உள்ள விபுலானந்த மணி மண்டபத்தில் இடம்பெற்ற மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில்,

இன்று நாம் அரசியல் ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் பலமடைந்திருக்கின்றோம்.

இந்த நிலையில் எமது தேசியத்தை சிதைப்பதற்கு எதிரிகள் பலவழிகளில் முயற்சிகள் செய்து வருகின்ற போதிலும் எமது தேசியத்தலைவரின் உறுதியான நிலைப்பாடும், மக்களின் ஒட்டுமொத்தப் பலமும் அதனை முறியடித்து வருகின்றது.

சமாதான காலத்தில் கூட நாங்கள் 64 போராளிகளை இழந்தோம். இந்நிலையில் கூட எமது தலைவர் எல்லைகடந்த பொறுமையைக் கடைப்பிடித்து வருகிறார்.

எமது தலைவரின் பொறுமையானது எமக்கு நிச்சயம் வெற்றியையே பெற்றுத்தரும் என்றார். (க-4)

## மட்டு.—அம்பாறையில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வுக் காட்சிகள்

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்றுமுன்தினம் காலை தேசி





யக் கொடியேற்றலுடன் மாவீரர் தின முதல் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற பிரதான நிகழ்வில், மட்டு. -அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானுவும் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவடிமுன்மாரிக் கோட்ட இராணுவத் தளபதி ரமணனும், மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யனும், அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதி ஜனார்த்தனனும், வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் ஆண்டான்குளக் கோட்ட இராணுவத் தளபதி அக்பரும் கலந்து கொண்டு தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தனர்.

இந்நிகழ்வில் மட்டு. அம்பாறை வனவளப் பொறுப்பாளர் டெளரி, மட்டு. அம்பாறை பொருண்மியப் பொறுப்பாளர் சலீம் (வள்ளல்), மட்டு. அம்பாறை துணை அரசியல் பொறுப்பாளர் தயாமோகன், மட்டு. அம்பாறை குட்டிசிறி மோட்டார் படையணியின் தளபதி புவி, சாள்ஸ் அன்ரனி படையணி தளபதிகளான பல்லவன், மிரேஸ், மட்டு. அம்பாறை நிதித்துறைப் பொறுப்பாளர் அகச்சுடர், மற்றும் தளபதிகளான உமாராம், கலைமதுரன், சாந்தன், கஜன், படைத்துறை பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த மணிவண்ணன், மட்டு. அம்பாறை மூத்த தளபதி நாகேஸ், நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் அதியமான், குடும்பி மலைக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் புகழன், தரவை மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் றொசான் மற்றும் பொதுமக்கள் போராளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-4)

## அரசியல் படுகொலைகளை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரசியல் படுகொலைகள் மற்றும் கடத்தல்களுக்கு எதிராக அரசியல் கட்சிகளினதும், சிவில் அமைப்புக்களினதும் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை லிற்றன் சுற்றுவட்டத்துக்கு அருகில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்குச் சார்பான நோர்வே அரசாங்கத்தின் கொள்கைகளை மாற்றுமாறும், இடைக்கால நிர்வாக யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும் என விடுதலைப்புலிகள் கொண்டுள்ள நிலைப்பாட்டை நோர்வே அரசாங்கம் கண்டிக்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் கோரிக்கை விடுதனர்.

அதன்பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் நோர்வேத் தூதரகத்துக்கு முன்பாக ஒன்றுகூடினர். தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நோர்வேத் தூதரக அதிகாரிகளிடம் கையளித்தனர்.

அத்துடன் தமிழ்ச்செல்வனை உலகம் முழுவதும் அழைத்துச் சென்று ஒவ்வொரு நாடுகளுக்கும் அறிமுகப்படுத்துகின்றனர். இரத்தக்கறைபடிந்த கரங்களால் நாட்டுத் தலைவர்களுக்கு கைலாகு கொடுத்து இந்தப் பயங்கரவாதக் குழுவினை சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ள வைக்கும் தூதுச் சேவையினை வழங்கும் குழுவாக நோர்வே மாறியுள்ளது.

இதனைத்தான் புலிகள் அமைப்புக்கும் அவர்களுக்கு உதவிகளை வழங்கும் நோர்வே அரசாங்கத்துக்கும் நாங்கள் அழுத்தம் கொடுக்கின்றோம்.

இந்தப் படுகொலைகளை உடனடியாக நிறுத்தவேண்டும் இவற்றை நிறுத்த முடியாவிட்டால் வீட்டுக்குச்செல்லுங்கள் என்ற அழுத்தத்தைக் கொடுப்பதற்காகவே மக்கள் சக்தியை முன்கொண்டுவருகின்றோம் எனக் கோஷம் எழுப்பினர். (க-4)


## நல்லூர் பிரதேச சபை

## வேலைகளிற்கான கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் (ICTAD) தரம் M-9 பதிவுச்சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 25.11.2004திகதி தொடக்கம் 02.12.2004திகதி பி.ப.3.00மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி :- 03.12.2004 ந.ப. 12.00மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி :- 03.12.2004 பி.ப.2.00மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
05. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை செயலாளர், நல்லூர் பிரதேச சபைக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கு அமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
06. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற்வரி |
|---|---|---|---|---|
| 01 | திருச்செல்வம் வீதி கல்லிட்டுத்தாரிடல் | 5550.00 | 500.00 | 75.00 |
| 02 | அம்பக்கர் வீதி கல்லிட்டுத்தாரிடல் | 3600.00 | 500.00 | 75.00 |
| 03 | ஆசாரி வீதி கல்லிட்டுத்தாரிடல் | 3500.00 | 500.00 | 75.00 |
| 04 | அப்பையா வீதி கல்லிட்டுத்தாரிடல் | 2000.00 | 500.00 | 75.00 |
| 05 | நெல்லியடி வீதி கல்லிட்டுத்தாரிடல் | 4120.00 | 500.00 | 75.00 |
| 06 | பரியாரியார் வீதி கல்லிட்டுத்தாரிடல் | 2900.00 | 500.00 | 75.00 |
| 07 | கம்பஸ் வீதி கல்லிட்டுத்தாரிடல் | 6250.00 | 500.00 | 75.00 |
| 08 | கல்வியங்காடு வாய்க்கால் புனரமைப்பு | 3000.00 | 500.00 | 75.00 |
| 09 | வேதபாராயண சகநிலையம் புனரமைப்பு | 1250.00 | 500.00 | 75.00 |

தலைமை அலுவலகம்,
நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
24.11.2004

பொன்னையா வைரமுத்து
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(C/744)


## உதவித் தொகையை அதிகரிக்குமாறு பல்கலைக்கழக மாணவர் கோரிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை மகாபொல புலமைப் பரிசிலுக்கு ஏற்ற வகையில் அதிகரிக்க வேண்டும் என்று பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை போதாது என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சங்க ஒருங்கிணைப்பாளர் துமிந்த நாகமுக தெரிவித்துள்ளார்.

தற்போது விஷேட திறமைக்கான உபகாரத் தொகையாக ஆயிரத்து 450 ரூபாவும் ஏனைய மாணவர்களுக்கான உதவு தொகையாக ஆயிரத்து 400ரூபாவும் வழங்கப் பட்டுவருகின்றது.

அதேவேளை கடந்த யூலை மாதம் முதல் மகாபொல புலமைப் பரிசில் தொகை 2ஆயிரம் ரூபா முதல் 2ஆயிரத்து 50ரூபாவரை அதிகரிக்கப் பட்டுள்ள போதும் உதவித் தொகையில் எந்த அதிகரிப்பும் செய்யப்படவில்லையென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்குமிடையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றிலேயே பல்கலைக் கழக மாணவர் சங்க ஒருங்கிணைப்பாளர் குறிப்பிடப்பட்ட விடயங்களை அமைச்சர், அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தார். (க-9)

# யாழில் மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு




## வலி.கிழக்கு பிரதேசசபை,நீர்வேலி

### 2005 ஆம் ஆண்டுக்கான மீள்கேள்வி அறிவித்தல்

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 29.11.2004 - 02.12.2004 வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 03.12.2004 பி.ப 2.00 மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி:- 03.12.2004 பி.ப.3.00 மணி

**கேள்விப்பத்திரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.**

| குத்தகை விபரம் | கேள்விப்பத்திரப் பணம் (வற் நீங்கலாக) | கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வற் நீங்கலாக) |
|---|---|---|---|
| ***அச்சுவேலி உப அலுவலகம்*** | | | |
| 01. அச்சுவேலி பொதுச் சந்தை (துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் உட்பட) | 500.00 | 2000.00 | 745750.00 |
| ***கோப்பாய் உப அலுவலகம்*** | | | |
| 01. கோப்பாய் வடக்கு மாட்டிறைச் சிக்கடை | 250.00 | 500.00 | 43700.00 |
| 02. இருபாலை ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 1900.00 |
| 03. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 1900.00 |
| ***உரும்பிராய் உப அலுவலகம்*** | | | |
| 01. ஊரெழு சந்தை | 50.00 | 100.00 | 950.00 |
| ***புத்தூர் உப அலுவலகம்*** | | | |
| 01. வாதரவத்தை மாட்டிறைச்சிக் கடை | 100.00 | 250.00 | 3325.00 |
| 02. புத்தூர் மத்திய சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 5700.00 |
| ***நீர்வேலி உப அலுவலகம்*** | | | |
| 01. நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 15960.00 |
| 02. நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 4750.00 |

**குறிப்பு:-** 01. புதிதாகப் பெறப்படும் கேள்விப்பத்திரத்தில் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். 29.11.2004க்கு முன் பெறப்பட்ட விண்ணப்பங்கள் செல்லுபடியாகாது.
02. 01.11.2004ஆம் திகதிய வலம்புரி/ தினக்குரல் பத்திரிகை விளம்பரக் குறிப்புகளுக்கமைய கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வலி.கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி.
26.11.2004. (C/745)

**இராசரத்தினம் இராசதுரை**
**செயலாளர்.**

## தமிழீழத் தேசியக் கொடியேற்ற எவரும் தடைவிதிக்க முடியாது

**உடன் நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் க.கா.குழுவுக்கு மகஜர்**

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு தடைவிதித்து இராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஒருபோதும் ஜீரணிக்கப்பட முடியாதவை. எமது மண்ணில் தமிழீழத் தேசியக் கொடியேற்ற எவரும் தடை விதிக்க முடியாது. இது விடயம் குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது விடயம் குறித்து தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரொன் பியூறு ஹொவ்டேயிற்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படி மகஜரின் விபரம் வருமாறு, எமது மண்ணில் எமது தேசியக்கொடியினை ஏற்றுவதற்கு இராணுவம் தடைவிதிப்பதானது, தமிழ் மக்களாகிய எமக்கு ஆத்திரமூட்டும் செயலாகும். தமிழர் தேசியம் இன்று வலுப்பெற்று நிற்பது எமது தேசியக் கொடியின் கீழ் என்பதனைப் பொறுக்க முடியாத இராணுவமே, இன்று தனது காட்டுமிராண்டித் தனத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.

அதற்கு ஏற்ப யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவாகிய நீங்கள், எமது தேசியக் கொடியை நாம் ஏற்றுவது யுத்தநிறுத்த மீறல் என்று கூறுவதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏனெனில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு மாறாக இன்னும் இராணுவம் மக்கள் குடியிருப்புகளில் இருந்து காவலரண்களை அகற்றாமலும், உயர்பாதுகாப்பு வலயங்கள் என்றும், தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையினைச் சீரழித்து இன்னும் மக்கள் தங்களின் சொந்த இடங்களில் குடியேற முடியாமல் இருப்பதானது இராணுவம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறி நிற்பதனை வெளிப்படையாகக் காட்டி நிற்கின்றது.

இவ்வாறான இராணுவம் மேற்கொள்ளும் யுத்தநிறுத்த ஒப்பந்த மீறல்களை தாங்கள் கண்டும் காணாமல் இருப்பது ஏன்? இவற்றைச் சுட்டிக்காட்ட தங்களால் முடியவில்லையா? அதை விடுத்து தமிழ் மக்களின் இரத்தத்தாலும், சதையாலும் எத்தனையோ உயிர்களை விலை கொடுத்தும உருவாக்கம் பெற்ற எமது தேசியக் கொடியினை இராணுவம் சேதப்படுத்துவதையும், அவமானப் படுத்துவதையும் நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா?

தமிழ் மக்களைத் தடிகளாலும் பொல்லுகளாலும் கூரிய ஆயுதங்களாலும் துப்பாக்கி முனையில் இராணுவம் தாக்குவது யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல் இல்லையா?

எனவே இதற்குச் சரியான பதிலை நீங்கள் தரவேண்டும். இல்லையேல், தமிழீழ தேசமெல்லாம் எமது தேசியக் கொடியினை நாங்கள் ஏற்றுவோம். இதனை மீறி இராணுவம் செயற் படுமானால் அது மீண்டும் ஒரு யுத்தத்தினை இராணுவம் வலிந்து உருவாக்குவதாகவே இருக்கும். அதன் விளைவுகளும் மிக மோச மாகவே அமையும். அதனை தமிழ் மக்களாகிய நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராகவே உள்ளோம். எனவே விரைந்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி தங்களை வேண்டுகின்றோம் என அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-43)

## மாவீரர் தின நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழகத்தின் மாவீரர் நினைவுநாள் வைபவம் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார் தலைமையில் நடைபெற்றது.

பொதுச் சுடரை துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸும், தேசியக் கொடியை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் ந.கண்ணனும் ஏற்றி வைத்தனர். ஈகைச் சுடரை, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அருள்வேல், பேராசிரியர் சி.பி. சிவநாதன், கலைப் பீடாதிபதி இரா. சிவச்சந்திரன், முகாமைத்துவ பீடாதிபதி நடராஜசுந்தரம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

உதவிப்பதிவாளர் திருமதி. சிவநேசனால் முதல் மாவீரன் சங்கரின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மலர் அஞ்சலியும் நினைவுரைகளும் இடம்பெற்றன. நினைவுரைகளை பேராசிரியர் மோகனதாஸும் யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழியும் நிகழ்த்தினர். (க-7)

# நேபாளப் படையினரின் தாக்குதலில் 300 மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் பலி

## தீவிரவாதிகளின் பயிற்சிமுகாம் அழிக்கப்பட்டிருப்பதாக தகவல்

(காத்மண்டு)

நேபாள இராணுவத்தினருக்கும் அந்நாட்டு தீவிரவாதிகளுக்கும் நடந்த கடும சண்டையில் 300 மாவோயிஸ்ட் தீவிர வாதிகளைக் கொன்றுவிட்டதாக நேபாள இராணுவம் கூறியுள்ளது.

நேபாள இராணுவத்தின் மேற்குப் பிரிவுத் தலைமை பிரிகேடியர் ஜெனரல் ராஜேந்திர பகதூர் தாப்பா கூறியதாவது,

நாட்டின் மேற்குப் பகுதியில் பாண் டான் கிராமத்தில் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்துக்கும் கடந்த வார இறுதி யில் கடும் சண்டை நடைபெற்றது.

இதில் 300 தீவிரவாதிகள் கொல லப்பட்டனர். இராணுவத்தரப்பில் 10 வீரர் கள் மட்டுமே இறந்தனர். இது இராணு வத்துக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி. இதுவரை 24 தீவிரவாதிகளின் சடலங் கள் கிடைத்துள்ளன. 2கி.மீற்றர் பரப்பள வில் பல இடங்களில் இரததககறை காணப படுகிறது. சில கி.மீற்றர் தூரத்தில் பல சடலங்கள் கிடப்பதாக கிராமவாசிகள் கூறுகின்றனர்.

சுமார் 2ஆயிரம் தீவிரவாதிகள் பயிறசி பெற்று வந்த முக்கிய முகாமை இராணுவம் அழிததுவிடடது.

நேபாள அரசுக்கு எதிராகப் பல்வேறு கிளர்ச்சிவாத நடவடிக்கைகளில ஈடுபடடுவரும மாவோஸட தீவிரவாதிகளின் நடவடிக் கைகள் அந்நாட்டு அரசு க்குப் பெரும் தலைவலி யை ஏற்படுத்தி வருகிறது.



இதனால் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை ஒழித துக்கட்டும் நடவடிக்கை களை அந்நாட்டு அரசு முடுக்கிவிட்டிருக்கிறது.

இதனையடுத்து மாவோ தீவிரவாதி கள் பதுங்கியிருக்கும் இடங்களை இல க்குவைத்து நேபாளப் படையினர் தம் தாக்குதல்களை ஆரம்பித்திருக்கின்றனர்.

எனினும் தவிரவாதிகள் இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சாது தொடர்ந்தும் தமது செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப)

## விமானக் கொள்வனவு

(லண்டன்)

அமெரிக்காவிடமிருந்து எப்.16 ரக போர் விமானங்களைப் பாகிஸ்தான் வாங்கும் என நம்பப்படுகிறது.

இதன்படி 18 முதல் 25 போர் விமா னங்களை வாங்கத் திட்டமிட்டுள்ளதாகப் பாகிஸ்தான் வாரப்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த ஆண்டு முதல் ஆறு மாதத்திற்குள் இந்த விமானங்களை வாங்கத் திட்டமிட்டு இருப்பதாகவும் இதற் காக 1.2 பில்லியன் டொலர் ஒதுக்கப் பட்டிருப்பதாகவும் கூறியுள்ளது. (ப)

## பாகிஸ்தானில் குண்டுவெடிபபு!

(குவெட்டர்)

பாகிஸ்தானில் குஸ்தார் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப் பில் ஒருவர் இறநததுடன 14பேர் காய மடைந்தனர்.

இந்தச் சம்பவத்துக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. குவெட்டாவிலிருந்து 350 கி.மீற்றர் தூரத் தில் இந்த நகரம் உள்ளது. இச்சம்பவத தில் ஒருவர் இறந்ததையும், 14 பேர் காயமடைந்ததையும் உள்ளூர் அதிகாரி ஒருவர் உறுதி செய்தார். (ப)

# காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரரை கண்ணியமாக நடத்தவேண்டும் என்கிறார் மன்மோகன்சிங்



(புதுடில்லி)

காஞ்சிபுரம் கோவில் அதிகாரி சங்கரராமன் கொலைவழக்கில் காஞ்சி சங்கராசசாரியர் ஜெயேந்திர சரஸவதி சுவாமியைத் தீபாவளியன்று தமிழகப் பொலிஸார் கைதுசெய்த சம்பவம் நாட் டையே உலுக்கி வருகிறது.

வேலூர் சிறையில் அடைக்கப்பட்ட அவரை பொலிஸார் 4நாள் பொலிஸ் காவலில் எடுத்து காஞ்சிபுரம் மகளிர் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரித்தனர்.

தற்போது அவர் மீண்டும் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் இந்த வழக்கில் முதல குற்றவாளியாகச் சேர்க்கபபட் டுள்ள ஜெயேந்திரர் கூலிப்படையை ஏவிவிட்டு சங்கரராமனைக் கொலை செய்யத் தூண்டியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூலிப்படையைச் சேர்ந்த கதிரவன், சின்னா ஆகியோர் ஏற்கனவே இரகசிய வாக்குமூலம் அளித்திருந்தனர். இவர்களை நேற்று முன்தினம் காஞ்சி புரம் கோர்ட்டில் ஆஜர்படுத்தியபோது இருவரும் பொலிஸார் எங்களை அடித் துத் துன்புறுத்தி ஜெயேந்திரருக்கு எதிராக வாக்குமூலம் சொல்லுமாறு கூறி னர். அதன்படி வாக்குமூலம் அளித்தோம என்றனர். இதனால் வழக்கு திசை மாறும் நிலை ஏற்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் பிரதமர் மன் மோகன்சிங் நேற்றிரவு முதன்மந்திரி ஜெயலலிதாவுககு அவசரக் கடிதம் அனுப் பினார்.

அதில் சிறையில் உள்ள ஜெயேந்தி ரரின் உடல்நிலை எனக்கு கவலை அளிப்பதாகவும், அவர் ஒரு மதத்தின் தலைவர். அவரைப் போன்ற முக்கியம் வாய்ந்த நபரிடம் விசாரணை நடத்தும போது கவனமும் கண்ணியமும் தேவை. அவரது உடல்நலத்தைப் பாதுகாக்கத் தேவையான எல்லா நடவடிக்கையும் எடுக்கப்படவேண்டும் என்று கூறியுள் ளார்.

மேலும் கொலைவழக்கின் கடு மையைக் கருதியே, சுவாமிஜியை கைது செய்யும் தீவிர நடவடிக்கையை தமி ழக அரசு எடுத்திருக்கும் என்று நான் நம்புகிறேன். ஆனாலும் சட்டத்தில் யாரும் தலையிடக்கூடாது என்பதும், சட்டம் தன் கடமையைச் செய்ய அனு மதிக்க வேண்டும் என்பதும் முக்கியமா னதாகும் என்று கடிதத்தில் குறிப்பிட்டு ள்ளார். (ப)

## WORLD NEWS உலக தரிசனம்

## சவூதியின் சனத்தொகை !

(ரியாத்)

சவூதி அரேபியாவின் மக்கள் தொகை 2கோடியே 27லட்சமாக உயர்ந் துள்ளது. சவூதி அரேபிய மக்கள் தொகை குறித்த கணக்கெடுப்பு விபரம கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டது. அதில் கூறியிருப்பதாவது,

சவூதியில் 92ஆம் ஆண்டுக்குப் பின் கடந்த செப்ரெம்பர் மாதம் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் உள்நாட்டினர், வெளிநாட்டினர் உட்பட தற்போது இரண்டு கோடியே 27லட்சம் மக்கள் தொகை உள்ளது தெரியவந்துள்ளது.

இதில் வெளிநாட்டினர் மட்டும் 61 லட்சத்து 40ஆயிரம் பேர் உள்ளனர். கடந்த 92இல் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது மொத்தம் 1 கோடியே 70 லட்சம் பேர் இருந்தனர். அவர் களில் 46லட்சத்து 40ஆயிரம் பேர் வெளிநாட்டினர். தற்போது உள்நாட்டவர் மற்றும் சவூதியில் தங்கியுள்ள வெளி நாட்டினர் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ப)



ஸ்கொட்லாந்து நாட்டின் அண்ட்ரூ பல்கலைக்கழகத்தில் யாருக்கும் பெரிய பாதிப்பில்லாத வகையில் வித்தியாசமான முறையில் ராகிங் நடைபெறுகிறது. இங்கு முதலாண்டில் சேரும் மாணவ -மாணவியர் மீது சீனியர் மாணவர்கள் ஷேவிங் கிறம் நுரையைத் தெளித்து மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர். இந்த விழா சமீபத்தில் கொண்டாடப்பட்டது. அப்போது பல்கலை வளாகத்தில் யுத்தகளம் போன்று பெரும் நுரைச் சண்டை நடைபெற்றது. அந்தக் காட்சியைப் படத்தில் காணலாம்.

# காஞ்சி சங்கராச்சாரியார் கைதுக்கு அமெரிக்க இந்துக்கள் கண்டனம்

(வாசிங்டன்)

காஞ்சி சங்கராச்சாரியார் கைது செய்யப்பட்ட விதம் குறித்து அமெரிக் காவிலுள்ள இந்துக் கோயில் மடாதி பதிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதர் ரோனன் சென்னுக்கு மடாதிபதிகள் எழுதிய கடிதத்தில் கூறி யிருப்பதாவது,

தமிழகத்தில் காஞ்சி சங்கராச்சாரி யார் கொலை வழக்கொன்றில் கைது செய்யப்பட்ட சமபவத்தால் வெளிநாடு களில் வாழும் இந்துக்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

காஞ்சி சங்கராச்சாரியாரை உட னடியாக விடுதலை செய்யவேண்டும். காஞ்சிமடம் முன்புபோல் வழக்கமான முறையில் செயல்பட அனுமதிக்க வேண்டும்.

உண்மையான கொலையாளிகளைக் கண்டுபிடிக்க பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படவேண்டும். இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனு ஜனாதிபதி அப்துல் கலாம், உதவி ஜனாதிபதி, மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன்



சிங், நிதியமைச்சர் சிதம்பரம், முதல் வர் ஜெயலலிதா ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ப)

# மேற்கிந்திய அணியிலிருந்து தலைவர் பிரையன்லாரா நீக்கம்

விளம்பர ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்ததன் காரணமாக,



மேற்கிந்தியத் தீவுகளணித் தலைவர் பிரையன்லாரா உட்பட 15 கிரிக்கெற் வீரர்களை மேற்கிந்திய கிரிக்கெற் சபை அணியிலிருந்து நீக்கியுள்ளது.

அடுத்த ஜனவரிமாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள முத்தரப்பு ஐந்து ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக மேற்கிந்திய தீவுகளணி அவுஸ்திரேலியா செல்லவுள்ளது. இதற்காக 25 வீரர்களுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கிறது. விளம்பர ஒப்பந்தச் சர்ச்சை காரணமாக இப் பயிற்சி முகாமுக்கு லாரா உட்பட 15 முன்னணி வீரர்கள் அழைக்கப்படவில்லை.

மேற்கிந்திய தீவுகளணியின் பிரதம விளம்பர அனுசரணையாளராக பிரபல கேபிள் அன்ட் வயர்லஸ் நிறுவனம் உள்ளது. அவுஸ்திரேலியா செல்லும் மேற்கிந்திய அணி வீரர்கள் இந்நிறுவன விளம்பரங்களில் மாத்திரமே நடிக்க வேண்டுமென்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு மேற்கிந்திய கிரிக்கெற்சபை கோரியது.

இதற்கு பிரையன்லாரா, உதவித்தலைவர் ராம்நரேஷ் சர்வான், கிறிஸ் கெயில், டிலான், ஹின்ட்ஸ், பெட்ரோ கொலின்ஸ், இயன் பிரட்ஷோ உட்பட 15 முன்னணி வீரர்கள் மறுப்புத் தெரிவித்தனர். இதனால் இவர்களை அணியிலிருந்து நீக்குவதாக மேற்கிந்திய கிரிக்கெற்சபை அறிவித்திருக்கிறது.

இதேவேளை, மேற்கிந்திய கிரிக்கெற்சபையின் இந்த முடிவுக்கு அவுஸ்திரேலிய கிரிக்கெற்சபை எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது. அத்துடன் அவுஸ்திரேலியா வரும் மேற்கிந்திய அணியில் முக்கிய வீரர்கள் இடம்பெறவேண்டும். அவ்வாறில்லாவிட்டால் அவுஸ்திரேலியாவும் புதிதாக இரண்டாம் தர அணியொன்றைத் தெரிவு செய்யுமென அவுஸ்திரேலிய கிரிக்கெற்சபைத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர். (து-7)



ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் நடைபெறும் பெட் கோப்பை டென்னிஸ் தொடரில். கடந்த புதன் கிழமை நடைபெற்றஅரையிறுதிப் போட்டியில், ரஷ்யாவின் அனஸ்டாசியா மிஸ்கினா 6:0, 6:0 என்ற செற்களில் ஆஸ்திரியாவின் பாட்ரி சியா வார்ட்சை வீழ்த்தினார்.

## விளையாட்டுச் செய்திகள்

# வாழ்நாள் சாதனையாளர் விருது இவ்வாண்டு கபில்தேவிற்கு

கிரிக்கெற்றில் சிறப்பாக செயற்பட்டமைக்காக வாழ்நாள் சாதனையாளர் விருது இவ்வாண்டு கபில்தேவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பிரபல கேஸ்டிரால் நிறுவனம், ஒவ்வொரு வருடமும் கிரிக்கெற்றில் சிறப்பாக செயற்பட்ட வீரர்களைத் தெரிவு செய்து விருது வழங்கிக் கௌரவித்து வருகிறது.

இந்த அடிப்படையில் இவ்வாண்டிற்கான வாழ்நாள் சாதனையாளர் விருது இந்திய கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவரும் சிறந்த சகலதுறை ஆட்டக்காரருமான கபில் தேவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

டெஸ்ட்போட்டிகளில் இந்தியாவின் சார்பில் அதிக அளவில்434 விக்கெற்றுக்களை கபில்தேவ் எடுத்திருக்கிறார்.

இச்சாதனை ஏற்படுத்தப்பட்டு 16 வருடங்களான போதும் இது வரை அது யாராலும் முறியடிக்கப்படவில்லை. அத்துடன் 131 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள கபில்தேவ் 5 ஆயிரத்து 248 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இந்திய அணிக்கு உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்த ஒரேயொரு அணித் தலைவர் என்ற பெருமையும் கபில் தேவிற்கு உண்டு.

இவ்விருது வழங்கும் வைபவம் கொல்கத்தாவில் நேற்று நடைபெற்றது. கபில் தேவிற்கு முன்னதாக 2000 ஆம் ஆண்டில் விஜய் ஹசாரேயும் 2001ஆம் ஆண்டில் உம்ரிகரும் 2002ஆம் ஆண்டில் சந்திரசேகரும் கடந்த ஆண்டு சுனில்



கவாஸ்கரும் இவ்விருதைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-7)

# விசா மறுக்கப்பட்ட செய்தியாளர்களுக்கு சிம்பாப்வே அனுமதி வழங்கியது

இங்கிலாந்து கிறிக்கெற் நிர்வாகமும் லண்டனிலுள்ள சிம்பாவ்வே தூதரக அதிகாரி களும் ஐ.சி.சி. தலைவா ஈஷான் மானி தரப்பினரும் நடாத்திய பேச்சு வார்த்தையை யடுத்து பிபிசி உட்பட அனைத்து ஊடகச் செய்தியாளர்களுக் கும் சிம்பாப்வே அரசு விசா அனுமதி வழங்கி யுள்ளது.



பிரிட்டனைச் சேர்ந்த 55 செய்தியாளர்கள் விசாவுக்காக விண்ணப்பித்திருந்த போதும் 13 பேருக்கு முழுமையான விபரங்களை அவர்கள் அளிக்காததால் விசா வழங்கப்படவில்லையென சிம்பாப் வேயின் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் ஜொனதன் மோயோ முன்னர் தெரிவித்திருக்கிறார்.

தற்போது அவர்கள் தொடர்பாக தேவையான விபரங்கள் பெறப்பட்டு விட்டதால் விசா வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து திட்டமிட்டபடி ஒரு நாள் போட்டிகள் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. (து-7)

# காரைநகர் மேற்கு வீதியில் வெள்ளம் பேருந்துச் சேவைகள் இடைநிறுத்தம்

(காரைநகர்)

காரைநகர் மேற்கு பிரதான வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை, மேற்கு வீதிக்கான போக்குவரத்துச்சேவை திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் காரைநகர் கிழக்கு வீதியினூடாக மட்டுமே காரைநகர் யாழ்ப்பாணத்திற்கான சேவை நடைபெற்று வருகின்றது.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் அடைமழை காரணமாக காரைநகர் மேற்கு வீதியில் உள்ள பல இடங்களில் வீதியை ஊடறுத்து வெள்ளம் பாய்ந்து ஓடுவதனால் பிரதான வீதி படுமோசமாகக் காணப்படுகின்றது.

இதனால் வீதிப்போக்குவரத்துச் சேவை தடைப்பட்டுள்ளது. இதனாலேயே பேருந்துப் போக்குவரத்துச் சேவையை தாம் நிறுத்தியுள்ளதாக காரைநகர் சாலையினர் தெரிவித்துள்ளனர்.

இதனால் மக்களின் போக்குவரத்து நடவடிக்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வீதியில் அமைந்துள்ள வியாவில் சைவ வித்தியாசாலை, யாழ்ற்ரன் கல்லூரி, இந்துக்கல்லூரி மற்றும் வங்கிகள், வைத்தியசாலைகள் என்பன மேற்கு வீதியில் அமைந்துள்ளதனால் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களும், பொது மக்களும் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.


குறிப்பாக பாடசாலைகளில் ஆசிரியர்கள், மாணவர்களின் வரவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பு-246)

## மாவீரர் தினநிகழ்வு

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி நடாத்திய மாவீரர் தினநினைவு வைபவம் நேற்று முன்தினம் காலை 8.00மணிக்கு கல்லூரியில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் பொதுச்சுடரை உப பீடாதிபதி சத்தியேந்திரம்பிள்ளை ஏற்றிவைத்தார்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் நா.கண்ணனால் தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, உப பீடாதிபதி தனபாலன் முதல் மாவீரன் சங்கரின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து ஈகச்சுடரையும் ஏற்றிவைத்தார்.

பதிவாளரால் கடற்கரும்புலி மேஜர் காந்தருபனின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மலர் அஞ்சலியும் நினைவுரைகளும் இடம்பெற்றன. (க-7)



தமிழ்த்தேசிய தலைவர் வே.பிரபாகரனின் 50வது பிறந்ததின நிகழ்வின் நினைவாக தமிழ் மாணவர் ஒன்றியத்தினரால் தாயக வளங்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட சுமார் 50 அடி நீளமான வாழ்த்து மடலையும், அதனைத் தாங்கிய பேழையையும் படத்தில் காணலாம். இது யாழ்.மாவட்ட அரசியல்துறையினருடாகக் கையளிப்பட்டுள்ளது.

# தரம்-1 மாணவர்களுக்கான இலவச போசாக்குணவுத் திட்டநிதி அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் ஒன்று மாணவர்களுக்கான இலவச போசாக் குணவுத் திட்டத்திற்கான நிதி அதிகரிக்கப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் எச்.எம்.வட்டனியந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்கப் பாடசாலைகளில் இலவச போஷாக்குணவு பெற்று வரும் மாணவன் ஒருவனின் நாளாந்த உணவுச் செலவுக்காக 20ரூபா ஒதுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2001ஆம் ஆண்டு முதல் நாடளாவிய ரீதியில் போஷாக்கு மட்டம் குறைவான மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தரம் ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்களை மையமாகக் கொண்டு இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் மாணவர் ஒருவருக்கு 15 ரூபாவுக்கான உணவுகளே வழங்கப்பட்டு வருகின்றன.

எனினும், தற்போது பொருட்களின் விலை அதிகரிப்பின் காரணமாக இத்தொகை போதாதுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கல்வி அமைச்சிடம் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதனால் எதிர்காலத்தில் அதிகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் போஷாக்குணவு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் இதுபற்றித் தெரிவிக்கையில் வடகிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட 120 பாடசாலைகளில் இத்திட்டம் அமுல்செய்யப்பட்டு வருவதுடன் சுமார் 24ஆயிரம் மாணவர்கள் இதனால் பயனடைந்து வருகின்றனர்.

மேலும் 508 பாடசாலைகளில் இத்திட்டத்தை விஸ்தரிப்பதனால் சுமார் ஒரு லட்சம் மாணவர்கள் பயன் அடைவார்கள் என அவர் கூறினார். (க-5,9)

தோன்றின் புகழொடு தோன்றுக அ;திலார்
தோன்றலில் தோன்றாமை நன்று - குறள்

வலம்புரி

## புனிதர்களின் புனிதநாள்

**நவம்பர் 27 மாவீரர்நாள். தமிழ் மண்ணுக்காக தங்கள் இன்னுயிரை ஈர்ந்தளித்த கொடையாளிகள் துயில் நீங்கி தங்கள் உறவுகளோடு சங்கமமாகின்ற நாள். தங்கள் உறவுகள் வாழ்வதற்காக - தங்கள் இன்னுயிரைக் கொடையாகக் கொடுத்த மாவீரர்கள், இன்று மனம்விட்டு பேசுகின்ற நாள்.**

**தாங்கள் நேசித்த - அன்பு செலுத்திய திரு மண்ணில் இருந்து எழுந்து, தமிழ்த் தேசத்தை பார்க்கின்ற நாள். அந்தப் புனிதமான நாள் இன்று.**

**பிறர் வாழ்வுக்காக தங்கள் வாழ்க்கைக்கு எல்லை இட்டவர்கள் இம் மாவீரர்கள். ஓடித் திரிந்து சந்திகளில் நின்று சந்தோசமாக ஆடிப் பாடி இளமையை இனிமையாக கழிக்க வேண்டியவர்கள் மீளாத் துயில் கொள்வதன் காரணம் என்ன என்பதை ஒருகணம் தமிழ் மக்கள் கூர்ந்து சிந்திக்கவேண்டும். தமது சுய நலனுக்காக தாம் மட்டும் மகிழ்வாக வாழ்வதற்காக போர்க்களம் புகுந்தவர்களா இந்த மாவீரர்கள். இல்லவே இல்லை. அடக்கு முறையை உடைத்தெறியப் புறப்பட்ட வீரமறவர்கள் அவர்கள்.**

**சிங்கள தேசம் காலத்திற்குக் காலம் தமிழர்களின் குருதியை புட்டெடுத்து புத்த பூமிக்கு அபிஷேகம் செய்யும் நிட்டூரத்திற்கு முடிவுகட்டுவதற்காகப் புறப்பட்ட தன்மானத் தமிழர்கள்.**

**தமிழ் தேசத்தை காப்பாற்ற வேண்டிய பொறுப்பை உணர்ந்து தங்கள் இளமைக் காலத்தில் ஆயுதங்களை தோள் மீது சுமந்து போர்க்களம் புறப்பட்ட புனிதர்கள் அங்கே அமைதியாக துயில் கொள்கிறார்கள். ஆம், பதினேழாயிரத்தி எழுநூறுக்கும் மேற்பட்ட மாவீரர்களின் வித்துடல்கள் தமிழ் மண்ணுக்குள் பௌத்திரமாக வைக்கப்பட்டுள்ளது.**

**ஒவ்வொரு கல்லறைகளும் தமிழ்த் தேசத்தின் விடியல் பற்றி பேசுகின்ற வரலாற்றுச் சின்னங்கள்- அந்த வரலாற்றுச் சின்னங்கள் ஈழத் தமிழர்கள் தம் மண்ணில் நிம்மதியாக வாழ வேண்டும் - கௌரவத்தோடு வாழவேண்டும் - சிங்கள தேசத்தின் இனவாதக் கரங்கள் இனி எக்காலத்திலும் தமிழர்களின் முதுகில் தடம்பதித்துவிடக்கூடாது என்பதைக் கூறிக் கொண்டே இருக்கின்றன.**

**தன்னலமன்றித் தமிழ் தேச நலனுக்காக மீளாத் துயில்கொள்ளும் மாவீரர்களின் அர்ப்பணிப்புக்கள், தியாகங்கள் மனித சாதனைகளின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டவை. அவர்களின் மீளாத்துயில் சமாதானத்தின் கண்களை திறக்க வைத்துள்ளது.**

**ஒரு காலத்தில் ஈழத்தமிழர்களுக்காக உலக நாடுகள் குரல் தரமாட்டாதா என்று ஏங்கிய நிலைமை இன்று மாறிவிட்டது.**

**இப்போதெல்லாம் விடுதலைப் புலிகளின் தலைமையுடன் பேசுவதற்காக ஐ.நா. சபை பிரதிநிதிகள் முதல் சர்வதேசப் பிரதிநிதிகள் முதல் வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு வந்த வண்ணம் உள்ளனர். இவ்வாறு சர்வதேச சமூகத்தையே நம்பால் ஈர்த்தவர்கள் நம் மாவீரர்கள். அவர்களின் அளவு கடந்த தியாகம் உலக வல்லரசுகளை கூட அதிசயிக்க வைத்தது.**

**போர்க்களத்தில் விடுதலைப் புலிகளின் "உயிராயுதம்" என்ற உடலும் உயிரும் கலந்து ஒப்பற்ற ஆயுதத்திற்கு இலங்கை அரசு மட்டுமல்ல அமெரிக்காவே திகைத்துப் போனது.**

**அதன் விளைவாகவே இன்று சமாதானப் பேச்சை உலக நாடுகள் வலியுறுத்துகின்றன. இவை யாவற்றுக்கும் பாத்திரமான அந்த வீர மறவர்களுக்காக தமிழ்த்தேசம் இன்று தன் இதய அஞ்சலியை செலுத்துகிறது.**

# போக்குவரத்துக்கு இடையூறாக வாகனங்களை நிறுத்த வேண்டாமென பொலிஸார் எச்சரிக்கை

## மீறுவோருக்கு தண்டப்பணம் அறவிடப்படும்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்துக்கு இடையூறான வகையில் வீதியில் நிறுத்தப்பட்டிருக்கும் துவிச்சக்கர வண்டிகள யாழ்ப்பாணப் போக்குவரத்துப் பொலிஸாரால் வீதியிலிருந்து அகற்றப்பட்டு வருகின்றன.

யாழ். போதனா வைத்தியசாலையின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டிகள் நேற்று முன்தினம் பொலிஸாரால் அகற்றப்பட்டன. இவ்விடத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கு ஏற்கனவே தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இருந்த போதும், அவ்விடத்தில் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்பவர்கள் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்திவிட்டுச் சென்று விடுவதனால் நோயாளர்களை ஏற்றி வருகின்ற அம்புலன்ஸ் வாகனங்கள் வைத்தியசாலைக்குள் உட்செல்வதற்கு இடையூறாக இருக்கின்றது.

அத்துடன் ஆஸ்பத்திரி வீதியூடான போக்குவரததிற்கும் இது பெரும் இடையூறாக இருக்கின்றது. இதனையடுததே நேற்று முன்தினம் இவ்விடத்தில் நிறுத்தப்பட்டுள்ள சுமார் 30ற்கும் மேற்பட்ட துவிச்சக்கர வண்டிகளை யாழ். போக்குவரத்துப் பொலிஸார் அப்புறப்படுத்தினர்.

வாகனங்கள் நிறுத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கும் இடங்களில் வாகனங்களை தரித்து நிறுத்த வேணடாம் எனவும், மீறி வாகனங்களை நிறுத்தினால் வாகனங்கள் பொலிஸ் நிலையங்களுக்கு ஏற்றிச் செல்லப்பட்டு உரிமையாளர்களிடம் இருந்து தண்டப்பணம் அறவிடப்படும் எனவும் பொலிஸார் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ந-19)

## காயமடைந்த நால்வரில் ஒருவரின் நிலை கவலைக்கிடம்

(வவுனியா)

வவுனியா வேப்பங்குளப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த நால்வரில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் வவுனியா வேப்பங்குளத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்திற்கு சென்ற இராணுவத்தினர் சுட்டதில் 4 பொதுமக்கள் படுகாயமடைந்தமையும், காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையும் தெரிந்ததே.

படுகாயமடைந்த நால்வரில் ஒருவர் வவுனியா வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இவரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மன்னாரில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக காயமடைந்து மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் சிலரும் மேலதிக சிகிச்சைக்காக வேறு வைத்தியசாலைக்கு இடம்மாற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (க-61)

## படையினரின் பூரண ஆதரவுடனேயே அசம்பாவிதங்கள் இடம்பெறுகின்றன

### கௌசல்யன் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

மாவீரர் தினம் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்டு வரும் நிகழ்வுகளைக் குழப்பும் சக்திகளுக்கு படையினர் பூரண ஆதரவு வழங்குவதாக விடுதலைப் புலிகளின் மட்டக் களப்பு- அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் கௌசல்யன் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேறறுமுன்தினம் மாலை அக்கரைப்பற்றில் போராளி காந்தன் எனப்படும் சாமித்தம்பி உமாகாந்தன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் இந்தக் குற்றத்தைச சுமத்தினார்.

அக்கரைப்பற்று பிரதேசம் விசேட அதிரடிப்படையினரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பிரதேசம். இப்படியான பிரதேசத்தில் இந்த வன்முறைச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றதென்றால் இதற்கு யார் பொறுப்பு? என வினா எழுப்பிய அவர், பாதுகாப்பு வழங்க வேண்டியவர்கள் அதனைச் செய்யத் தவறிவிட்டார்கள். படையினரின் பூரண ஒத்துழைப்புடன் தான் இத்தகைய சம்பவங்கள் நடைபெறுகின்றன.

திட்டமிட்ட வகையில் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சியாகவே இதனை நாம் கருதுகின்றோம். இந்த சம்பவம் பாரதூரமான யுத்தநிறுத்த மீறலாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

# மட்டு. கொலை விசாரணைகளில் பொலிஸார் ஒத்துழைப்புத் தருவதில்லை

## க.கா. குழு பேச்சாளர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தொடர்ந்து இடம்பெற்று வரும படுகொலைகள் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு பூரண கவனம் செலுத்தி வருவதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஒஸ்கார் ஸ்மல்லர் தெரிவித்தார்.

அவர் ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் அண்மைக்காலமாக இடமபெற்று வரும கொலைகள் தொடர்பாக பொலிஸாரும விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும், பொலிஸார் இது விடயத்தில் யுத்த நிறுதத் கண்காணிப்புக்குழுவுக்கு உரிய முறையில் ஒத்துழைப்பு வழங்குவதில்லை. இந்த நிலையில் பொலிஸாரின் இந்த விசாரணைகள் முடிவடையும் போதே அது குறித்து எம்மால் கருத்துக் கூற முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

## இம்ரான்-பாண்டியன் படையணியின் மாவீரர் தின விஷேட நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை ஒட்டி யாழ். மாவட்ட அரசியல் துறையினரின் அனுரணையில் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சுப்பிரமணிய முருகன் ஆலய தெற்கு வீதியில் இம்ரான்-பாண்டியன் படையணியின் மாவீரர் தின விஷேட நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர் சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொதுச் சுடரை கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் கமலநாதன், போராளி தனந்திரன், கொக்குவில் வர்த்தக சஙகத் தலைவர், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து கொக்குவில் இந்துக் கல்லூரி அதபர் கமலநாதன், யாழ். மாவட்ட அரசியல்துறைப பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் பெருமளவு பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டனர். (ந-5)

## நாட்டில் 14 ஆயிரம் பேருக்கு டெங்கு நோய்த் தாக்கம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பல்வேறு இடங்களிலும் டெங்கு நோய்த்தாக்கத்திற்குட்பட்ட சுமார் 14 ஆயிரம் பேர் இனங்காணப்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க தெரிவித்தார்.

இவ்வருட ஆரம்பம் முதல் இதுவரை டெங்கு நோயால் 76 பேர் உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து டெங்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்குரிய வழிவகைகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்துவதற்காக விஷேட திட்டம் ஒன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தவிர டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான 5ஆண்டு விஷேட திட்டமொன்றையும் செயற்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொணடுள்ளது.

இத்திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு பொதுமக்களின் உதவியும் அர்ப்பணிப்பும் தேவை என்றும் நிஹால் அபேசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார். (ந-4)

### தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

**நீங்கள் கடவுளைக் கண்டாக வேண்டும். ஆன்மாவை உணர்ந்தாக வேண்டும். அது தான் செயல்முறை மதம். எளிய உள்ளம் படைத்தவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில பரலோக சாம்ராஜ்யம் அவர்களுடையது என்று இயேசு போதித்தார். செயல்முறை மதம் என்று இதை நீங்கள் சொல்வதில்லை. அது என்ன வெறும் வேடிக்கைப் பேச்சா?**

**சுவாமி விவேகானந்தர்**

# இணுவிலில் நேற்று கோஷ்டி மோதல்

(கோண்டாவில்)

இணுவில் காரைக்கால் பகுதியில் இரு குழுவினருக்கிடையே ஏற்ப்ட்டமோதலை யடுத்து அப்பகுதியில் நேற்று மாலை பதற்றமான நிலைமை உருவானது.

நேற்று மாலை 4.30 மணியளவில் இணுவில் பகுதியைச் சேர்ந்த ஒருவரின் கைக் கூலிகள் எனக் கருதப்படும்சுமார் 40 இற்கும் மேற்பட்டோர் லொறி ஒன்றில் காரைக்கால் பகுதிக்குச் சென்று அடாவடித்தனத்தில் ஈடுபட்டதாக கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி செல்வம் தெரிவித்தார். காரைக்கால் உதயசூரியன் சன சமூக நிலையம் உட்பட அதனைச் சூழவுள்ள ஆறு வீடுகளும் கைக்கூலிகளால் அடித்துச் சேதமாக்கப்பட்டன.

வீடுகளுக்குள் நுழைந்த கைக்கூலிகள அங்கிருந்த தளபாடங்கள் ஜன்னல்கள் என்பவற்றையும் அடித்து நொருக்கியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்ற கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் 6 பேரைக்கைதுசெய்தனர்.

நவரத்தினம் சுதாகர் (வயது 20) கல்வியங்காடு, சிவராசா (வயது 17) நுணாவில், கொன்சன்பிரதாப் (வயது16) பாசையூர், தெய்வேந்திரன் விஜிதரன் (வயது 20) இணுவில், பிரேமதாசா என்சோர் (வயது 18) கல்வியங்காடு ஆகியோரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களாவர். இணுவில் மற்றும் காரைக்கால் பகுதியினருக்கிடையே கடந்த 21 ஆம் திகதி மோதல் ஏற்பட்டதாகவும் அதன் எதிரொலியாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ச-130,74)

# புலிகள் - படையினர் நேற்று மன்னாரில் சந்தித்துப் பேச்சு

(மன்னார்)

மன்னாரில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கு மிடையிலான சந்திப்பொன்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் இராணுவ நகரக் கட்டளைத் தளபதி, மன்னார் பொலிஸ் அத்தியட்சகர், விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மன்னார் மாவட்ட அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

மன்னாரில் கடந்த இருநாட்கள் ஏற்பட்ட பதற்றமான நிலைமை போன்று இனியொரு சம்பவம் இடம்பெறாமல் தடுப்பது தொடர்பாக இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.(ச)

# சமாதான செயலகப் பணிப்பாளர் மன்னார் நிலைமைகளை ஆராய்வு

(மன்னார்)

அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால நேற்று முன்தினம் மன்னாருக்கு விஜயம் செய்தார். அவர் அங்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி பிளின் பிளின்ஸ்ர்ந், அரசு தரப்பு பிரதிநிதிகள், விடுதலைப் புலிப் பிரதிநிதிகள ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்சந்திப்பு தள்ளாடி இராணுவ முகாமில் நடைபெற்றது.

மன்னாரில் படைத்தரப்பினர் புலிக்கொடியேற்றிய மக்களின் மீது தாக்குதல் நடாத்திய சம்பவத்தையடுத்து அங்கு ஏற்பட்ட பதற்றநிலையைத் தொடர்ந்து ஜயந்த தனபால தள்ளாடி இராணுவ முகாம் சந்திப்பை முடித்துக் கொண்டவுடன் வவுனியா திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

# பூசகருக்கு சிறை

(துன்னாலை)

தொண்டமனாற்று பகுதியில் இடம்பெற்ற கைகலப்புச் சம்பவத்தின்போது ஒருவரை அடித்து காயப்படுத்தியமைக்காக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க. அரியநாயகம் கோப்பாய் பூசகர் ஒருவருக்கு 15 மாத சிறைத் தண்டனையும் மற்றொருவருக்கு 6 மாத சிறைத்தண்டனையும் விதித்தார்.

(ப-101)

# இலவச மருத்துவ முகாம்

கொக்குவில் லயன்ஸ் கழகமும் கொழும்பு கொட்டேனா லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் ஒன்று இன்று காலை 8 மணிமுதல் பலசுட்டி காந்திஜி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. இம்மருத்துவ முகாமில் பொது வைத்தியப் பரிசோதனை, கண்பரி சோதித்து இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல் என்பன நடைபெறவுள்ளது. (ச)






நேற்று திருகோணமலையில் ஜே.வி.பியினரால் மாவீரர்தினத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு எதிராகவும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் காட்சிகள்.

## இரு இராணுவத்..

தொடர்பாக பலாலி இராணுவப் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்றிரவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் நுணாவில் பிரதேசத்தில் இரு இராணுவச் சிப்பாய்கள் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தவேளை இருட்டில் மறைந்திருந்த இளைஞர்கள் சிலபேர் கூரிய ஆயுதத்தினால் ஒரு சிப்பாயின் வலது கையை வெட்டியும் மற்றைய சிப்பாயின் இடது கையையும் வெட்டியதுடன் அவரின் தலையிலும் வெட்டி படுகாயப்படுத்தியுள்ளனர் என்றும் இருட்டின் காரணமாக அந்த நபர்களை அடையாளங் காணமுடியாமல் போயுள்ளதாகவும் காயப்பட்டவர்களின் சாட்சி மூலம் விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை மேற்கொண்டாரென்பது தெரியவருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-29)

## மல்வத்த...

தாங்களாகவே அதற்கான தீர்வையும் ஆராயவேண்டும். அதனை வேறு எவராலும் தீர்க்க முடியாது. சமாதான முயற்சிகளை வெற்றிகரமாக நடத்துவதற்கு உயர்மட்டக் குழுவினரை வழங்க நோர்வே தயாராக உள்ளது. ஆனால் சமாதான முயற்சிகள் தொடர்பான தீர்மானங்களை அரசும் விடுதலைப்புலிகளுமே மேற்கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டத்தால்...

அலுவலகத்தை நோக்கிச் செல்ல முற்பட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களை அவ் வீதிவழியாகச் செல்ல அனுமதி மறுத்த பொலிஸார் மீது அவர்கள் கற்களை வீசித் தாக்கியதுடன் வீதித் தடைகளையும் தகர்த்து எறிந்தனர்.

இதனால் பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்தனர்.

இதனையடுத்து அப் பகுதியில் பெரும் பதற்றம் உருவானது. ஆர்ப்பாட்டக்காரர்கள் தாம் எடுத்துவந்த கண்காணிப்புக் குழுவின் உருவப் பொம்மையையும், நோர்வேத் தேசியக் கொடியையும் அவ்விடத்திலே தீயிட்டுக் கொளுத்தி வெறியாட்டம் புரிந்தனர்.

இதனால் உடனடியாக நகரக் கடைகள் இழுத்து மூடப்பட்டன. எங்கும் அச்சமும் பதற்றமுமான சூழ்நிலை உருவானது. இதனையடுத்து உடனடியாக நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு பொலிஸ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனினும் நேற்றிரவு அது தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. இரா. சம்பந்தனின் முயற்சியால் நீக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இதேவேளை ஊரடங்கு அமுலில் இருந்த வேளை நகரில் பேரினவாதிகள் வன்முறைகளில் ஈடுபட்டதாக தெரியவருகிறது.

மாவீரர் நினைவுப் பந்தல்கள், கட்அவுட்டுகள், கொடிகள் என்பன அறுத்துச் சேதமாக்கப்பட்டதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க மாவீரர்தின நிகழ்வும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் ஐம்பதாவது பிறந்த தின நிகழ்வும் ஊரடங்குக்கு மத்தியிலும் மிகவும் சிறப்பாக கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

(இ-04-08)

## தேசியத் தலைவரின் பிறந்த நாள்...

வாழ்த்துச் செய்தியை தேசியத் தலைவரின் வீடுவரை எடுத்துச் சென்றனர். எடுத்துச் செல்லப்பட்ட வாழ்த்துச் செய்தி கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான கண்ணதாசனிடம் கையளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தேசியத் தலைவரின் இல்லத்தில் பொதுக்கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இந் நிகழ்வில் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான அமுதாப் உட்பட மற்றும் பல பிரமுகர்கள் உரையாற்றினர். இதில் போராளிகள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து வல்வெட்டித்துறை மக்களின் ஏற்பாட்டில் தேசியத் தலைவரின் இல்லத்தில் பிற்பகல் 50 கிலோ நிறையுடைய கேக் வெட்டப்பட்டு பிறந்தநாள் நிகழ்வு கொண்டாடப்பட்டது.

அத்துடன் பருத்தித்துறை வர்த்தகர்கள் மற்றும் அப்பகுதி கடற்றொழிலாளர் சங்கங்களின் ஏற்பாட்டில் பருத்தித்துறை நகரிலும் 50 கிலோ நிறையுடைய கேக் வெட்டப்பட்டு பிறந்தநாள் நிகழ்வு கொண்டாடப்பட்டது.

இதேவேளை தேசியத் தலைவரின் பிறந்த நாளையொட்டி தேசியத் எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வொன்றும் இடம்பெற்றது. இவ் இரத்ததான நிகழ்வை யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி. இளம்பரிதி ஆரம்பித்து வைத்தார். இதன்போது நூறிற்கும் மேற்பட்டோர் இரத்ததானம் செய்தனர்.

**சாவச்சேரி**

சாவகச்சேரி வர்த்தகர்களுடன் அப்பகுதி பொதுமக்களும் ஒன்றிணைந்து தமிழீழத் தேசியத் தலைவரின் பொன்விழாவையொட்டி நேற்றுக் காலை சாவகச்சேரி பஸ்நிலையம் முன்பாக 50 பானைகளில் பொங்கல் பொங்கினர்.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் மற்றும் தென்மராட்சி பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் கலைவாணன் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

**புங்குடுதீவு**

தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்த நாளையொட்டி புங்குடுதீவு தேசிய எழுச்சிப் பேரவை மற்றும் புங்குடுதீவு பொது அமைப்புக்கள் ஆகியன ஒன்றிணைந்து புங்குடுதீவு மதிரியம்பதி சிவன் தேவஸ்தானத்தில் நேற்றுக் காலை 50 பானைகளில் பொங்கினர்.

இது தவிர புங்குடுதீவுப் பகுதிகளில் உள்ள இந்து ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகளும் ஆராதனைகளும் இடம்பெற்றன. அத்துடன் புங்குடுதீவு, நயினாதீவு, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றிணைந்து புங்குடுதீவு பிரதான சந்திகளில் வைத்து பொதுமக்களுக்கு இனிப்புப் பண்டங்களை வழங்கின.

இவற்றுடன் தேசியத் தலைவரின் பிறந்த நாளையொட்டி புங்குடுதீவு கத்தோலிக்க விளையாட்டுக் கழகமும் கத்தோலிக்க சனசமூக நிலையமும் ஒன்றிணைந்து நேற்று நண்பகல் புங்குடுதீவு வேளாங்கன்னி மாதா கோவில் முன்றலில் 500 பனம் விதைகளை நாட்டினர். மற்றும் புங்குடுதீவு தேசிய எழுச்சிப் பேரவை தமிழீழ தேசியத் தலைவர் படம் அச்சிடப்பட்ட 2005 ஆம் ஆண்டுக்குரிய கலண்டர்களையும் பொதுமக்களுக்கு வழங்கியது.

மேலும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் 50 பானைகளில் பொங்கல் பொங்கப்பட்டதுடன் விசேட பூஜை வழிபாடு ஆராதனைகளும் இடம்பெற்றது.

(ந-43-126-37-05)







இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.